பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவஸ்ரீ மாசிமீ கஉ (1936 பிப்ரவரி 13) வியாழக்கிழமை { இலக்கம்—அ

## சக்கரவர்த்தியின் அருந்தப்பு

### குண்டுமாரிக்கு அஞ்சவில்லை

### குண்டுகள் பொழிய உலாவினர்.

இப்போது அபிசீனியச் சக்கரவர்த்தி தெஸி நகரத்தில் நிற்கிறார். அவரைக் கொல்ல வேண்டுமென்பதே இற்றலியின் ஆசையாயிருக்கிறது. சென்ற 9-ம்திகதி 7 இற்றலிய ஆகாசவிமானங்கள் தெஸி நகரின் மீது நின்று ஒரு மணி நேரமாகக் குண்டுமாரி பொழிந்தன. மாளிகைக்குச் சமீபமாகவும் பல குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

குண்டுகள் விழா இடத்தில் நிற்கும்படி சக்கரவர்த்திக்கு பந்திரிகள் பலமுறை புத்தி புகன்றும், அவர் அவற்றைக் கேட்காது, அஞ்சாது வெளியிலேயே, குண்டுமாரிக் கிடையில உலாவினர். ஆனால் தெய்வாதீனமாக ஒரு குண்டாவது அந்த ஒரு மணி நேரத்திலும் அவர் மீது படவில்லை.

## சீனவிற் கஷ்டம்.

ஹோலங் தலைமையில் செம்படையினர் 50000 பேர் தலைநகரை வளைந்துகொள்ளப் புறப்பட்டிருக்கின்றனர். தலைநகரில் ஏழு பிரெஞ்சு பிஷப்புகளும் கனடா ஸ்திரீ பாதிரிகள் பத்துப்பேருமிருக்கின்றனர். அவர்களின் நிலைமையைப்பற்றிக் கவலையேற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அமெரிக்க பாதிரிகள் புறப்பட்டுப் போய்விட்டார்கள். செம்படைகள் குகிவிடாங்குக்குப் பதினைந்து மைல் தூரத்திற்குள்ளாகவிருக்கின்றன.

தலைநகர்ப் பாதுகாப்புக்காக யூனனிலிருந்து படைகளும் விமானங்களும் செல்கின்றன.

## தன்பாகனைக் கொன்று தின்ற யானை.

கண்டிப்பகுதியிலிருந்து ஒரு அசம்பாவிதமான புதினம் வந்துள்ளது; கண்டிக்கும் அநுராசபுரத்திற்குமிடையேயுள்ள யாவபாகாம என்னுங்கிராமத்தில் மதங்கொண்ட ஒரு யானை தன்பாகனைப் பிடித்து அடித்துக்கொன்று அவனுடைய உடம்பின் சில அங்கங்கள் தவிர ஏனையவற்றைத் தின்றுவிட்டதாம். இப்படிக் கொன்றுதின்ற பின்னரும் அந்தயானை அவ்விடத்தை விட்டுப் போக மறுக்கின்றது. அதன் உக்கிர நிலையைக்கண்ட எவரும் இதனையணுக அஞ்சித் தூரத்திலே நின்றனர். பின்னர், அந்த மதங்கொண்டயானை பத்துப்பன்னிரண்டு தென்னைகளை வேரோடு பறித்துவீழ்த்தி ஓலையைத் தின்றுவிட்டு ஒரு தந்திக் கம்பத்தையும் பிடுங்கியெறிந்து அதிகநேரஞ்செல்லச் சற்றே சாந்தமடைய சிலபாகர் அதை அகப்படுத்திக் கட்டிவிட்டனர்.

## டிவேலரு - போஸ் சந்திப்பு.

### ஐரிஷ் வீரனின் வரவேற்பு.

### இந்தியக்கிளர்ச்சிபற்றி அநுதாபம்.

வங்காளவீரன் ஸ்ரீஜுத் சுபாஷ சந்திரபோஷ் அவர்கள் சென்ற 3ம் தேதி ஐயர்லாந்துக்குச் சென்று ஐரிஷ் குடியரசுத்தலைவரான மிஸ்ரர் ஈமன் டிவேலருவைக் கண்டுபேசினர்.

ஸ்ரீஜுத்-போஸ் அவர்களுக்கு ஐரிஷ்வீரன் மிக்க உற்சாகமான வரவேற்பு அளித்து க்ஷேமலாபங்கள் விசாரித்தார். பின்னர் அவர் இந்திய அரசியற்பிரச்சினைகளை ஸ்ரீஜுத் போஸிடம் கேட்டு இந்திய சுதந்திரக் கிளர்ச்சியில் தமக்கிருக்கும் மனப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவித்தார்.

## இந்திய—இலங்கை சுதேசப் பொருட்சாலை.

இந்தியா இலங்கை என்னும் இருதேசங்களும் பொருளாதார நிலைகளால் மேன்மையடைய வேண்டுமென்னும் கருத்தோடு இவ்விரு தேசங்களிலும் இக்காலில் பெருமுயற்சிகளோடு செய்யப்படும் பொருள்கள் விற்கப்படுவதற்காக மேற்குறிப்பிட்ட பெயரால் ஓர் புதிய கடை வண்ணார்பண்ணை செட்டித் தெருவில் இம்மாதம் 6-ந் திகதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்குத் திறக்கப் பட்டது. யாழ்ப்பாணத்திலே சுதேசமுயற்சிகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன வென்பதற்கும், சுதேசச் சரக்குகள் விரும்பப்படுகின்றனவென்பதற்கும் இக்கடை ஓர் அறிகுறியாகும் இக் கடையில் சேலத்திலே காந்தி ஆச்சிரமத்தில் செய்யப்படும் தூய்மையான பலவித கதர் ஆடைகளே யல்லாமல், இந்தியாவில் பல்வேறு இடங்களிலும் மிகுந்த கைத்திறமையுடன் உண்டாக்கப்படும் பலவகையான அழகிய பொருள்களும் விற்பனை செய்யப்படும். அவ் இந்தியப் பொருள்களோடு இலங்கைப் பொருள்களும் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இரு தேசங்களின் மேம்பாட்டையும் நாடும் மகளிரும் ஆடவரும் அப்பொருள்களில் தமக்கு வேண்டியனவற்றை ஆர்வத்துடன் வாங்கிக் கைத்தொழிலாளர்களையும் அவர்களால் செய்யப்பட்ட பொருள்களையும் இங்குப் பரவச்செய்யும் முயற்சியை மேற்கொண்டிருப்பவர்களையும் ஊக்கப்படுத்தக் கடமைப்படுவார்களாக. (கடிதம்)

## கீதையின் போதனை

### அமைதிக்கும் சாந்திக்கும் வழிகாட்டி

### பெண்மணியின் போதனை

---o---

பிரோஸ்பூரில் பாடசாலைகள் மேற்பார்வை அதிகாரியாக இருக்கும் மிஸ் கதிஜாபீகம், ஆர்ய சமாஜக் கூட்டமொன்றில் கீதை போதிக்கும் படிப்பினையைப் பற்றிப்பேசினர். அவர் கூறியதாவது;— அமைதிக்கும் சாந்திக்கும் கீதைதான் வழிகாட்டுகின்றது. ஹிருதயத்தின் வேதனையையும் சமனம் செய்ய வேண்டுமானால் ஒருமனிதன் கீதையில் சொல்லியிருக்கிறபடி செய்யவேண்டும். முதலில் அப்பியாசம் அல்லது முயற்சி. பிறகு தியானம் செய்ய வேண்டும். இதனால் துன்மார்க்கத்திலிருந்து சன்மார்க்கத்தை உற்பத்தி செய்யலாம், பிறகு சாந்தி என்னும் அறிவுக்கும் விவேகத்துக்கும் எட்டாத ஒருஅமைதிநிலை ஏற்படுகிறது. பகவான் தம் அன்பை சரிசமமாக உலகம் பூராவிலும் பொழிகிறர். ஒருவருக்கொருவர் சச்சரவு செய்துகொண்டால் அவர் மனம் புண்படுகிறது.

## இலங்கைச் சேவிங் வங்கி.

இலங்கைச் சேவிங் வங்கியில்சனங்கள் வரவர அதிகமாகப் பணத்தைச் சேமித்து வருகிறர்களெனத் தெரிகிறது. அப்பணத்திற்கு வருமானவரி இல்லாததாலும், ஈட்டின்பேரில் குறைந்த வட்டிக்கு மேப்படி வங்கி கடன்கொடுப்பதாலும் சனங்கள் அவ்வங்கியில் அதிகமான பணத்தைச் சேமித்துவருகிறர்கள். இவ்வங்கியின் கடந்த ஆண்டு அறிக்கை சமீபத்தில்வெளியிடப்பட்டிருக்கிறது. 1935 இல் நபாய் 59,23,012 மக்களால் சேமஞ்செய்யப்பட்டதென்றும் மேற்படி அறிக்கையிலிருந்துதெரியவருகிறது.

## விவாகம்

பொன்னம்பலம் தைபல்அம்பாள்.

மீசாலை தெற்கு வாசரும் திரு வி. தம்பு அவர்களின் புத்திரனும் கொழும்பு வருமானவரி நிலையத்தில் கடமை வகிப்பவருமாகிய கிறைநாட் செல்வன் த. பொன்னம்பலம் அவர்கட்கும் திருநெல்வேலிவாசரும் காலஞ்சென்ற திரு கமசிவயம் அவர்களின் புதல்வியும் சவகச்சேரி அரசினர் வைத்தியசாலை அதிபர் டக்டர் வை த. பசுபதி அவர்களின் பிரிய மருகியுமன கிறைநாட் செல்வி வையல் அம்பாளுக்கும் நிகழும் யுவ வருடம் தைத்திங்கள் 28ம் நாள் திங்கட்கிழமை (10-2-36) நிரம்ந்த நன்ஞளில் சகல வைபவங்களுடன் திருமணம் நடந்தமை கேட்டு மிக இறும்பூதடையலானேம் மணமக்கள் பலவகைச் சிறப்புக்களு—னும் எல்லா நலன்களுமெய்தி இன்பநல் வாழ்வில் ஒன்றி பதினறும்பெற்றும் பெருவாழ்வு வாழ எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக.

கடிதம்.

## சிறந்த ஊரும் சிங்காரத் தேரும்

### நீர்கொழும்பு கதிர்வேலாயுதர் உற்சவம்.

### தைப்பூசத்தினத்தன்று அற்புதக்காட்சி

(W. S. சார்லிஸ் பர்ணாந்து)

நீர்வளம் நில வளங்களாலும் தெங்கணிச் சோலைகளாலும் கனுவித அலங்கிட்டங்களாலுமே யன்றி பொன்னும் நன்மணியும் முத்துமாதியாக் திரவியங்களாலும் இதன் மங்களச் சிறப்பை நோக்கி பிரமித்து பிற தேசம் பிற ஜாதியாராலும் மாட்சிமை தங்கிய பல நாமங்கள் சூட்டப்பெற்று நான்கு வேதங்களாலும் பரிசுத்த நாடெனப் பாராட்டப்படும் இவ் இலங்கைத் தீவின் கண் சிறப்புற்று விளங்கும் நகர்களில் நீர்கொழும்பு மொன்றெனலாம் இந்நகரில் உள்ள முத்து மாரியம்மன் திருக்கோவில் தைப்பூச விழாவின் நிமித்தம், கதிர்வேலாயுத சுவாமியின் ஊர்வலம் இம் மாதம் 5-ந் திகதி புதன்கிழமை காலை 10 மணி அளவில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியின் சர்வ ஆபரண பூஷிதராய் அலங்கிருதமாக அமைக்கப்பெற்ற திருத்தேர் மீதெழுந்தருளி, ஏராளமான அடியார்கள் புடை சூழ இனிய வாத்திய பக்தர்கள் கோஷிக்க பல்வேறு விருதுகள் ஜொலிக்க மலையை ஒத்த யானைகள் முன் நடக்க ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருத்தேரில் எழுந்தருளவே மேற்கண்ட கோவிலின் தளத்தைவிட்டுப் புறப்பட்டு கன்னாரத்தெரு நடந்து பண்ணைப்பிட்டி வழியாக நடந்து தவட்டகாவத்தையிலுள்ள சித்தி விநாயகர் கோயிலைச் சேர்ந்து அங்கு நானாவித அலங்காரங்களோடு வீற்றிருந்து மூன்று நாள் அன்னதானம் நடத்தியபின் 7-ந் திகதி 4 மணிக்கு முத்துமாரி அம்மன் கோவிலுக்கு வரும் நேரமாகையால் தவட்டகாவத்தைக் கோவிலுக்கு முன்பாக ஏராளமான பக்தர்கள் கூடியிருந்தார்கள். அந்நேரம் நாகசுர கோஷ்டினர் இனிய கீதங்களை வாசி இசைத்தார்கள். கோவிலுக்கு வெளியே திருத்தேர் முன்பாக வீதியின் இருமருங்கிலும் வெண்கொற்றக் குடைகளையும் சிலப்பு வாணக் கொடிகளையும் தாங்கிய சிவப்பு அங்கி அணிந்தவர்கள் பலர் அணிவகுத்து நின்றனர். திருச்சிறுப்பள்ளியிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த ... சின்னக் கிருஷ்ணனாயுடு பாண்டு வாத்தியக் கோஷ்டியினர் இனிய கீர்த்தனைகளைப் பாடி அனைவரையும் மகிழச் செய்தனர். பின் தேரைச் சுற்றிலும் செய்வதற்கான சடங்குகள் யாவும் முடிவுறவே ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருத்தேரில எழுந்தருளும் சமயம் மேள வாத்தியங்கள் முழங்கும் என முழங்க கூட தீபத்தைச் சுவாமிக்கு முன்பாக நீட்டி ஆராதித்த போது பக்தர்கள் பலர் கைகளைச் சிரமேல் கூப்பி சுவாமியின் நாமத்தை

## படத்திற்கு மாலை.

---:o:---

### புதுமாதிரியான கலியாணம்.

### திருச்சூர்ச் சம்பவம்.

பாலகிருஷ்ண மீனன் என்பவர் சிங்கப்பூரில் வசித்து வருகிறார். அவர் தனது படத்தை மணமகள் இருக்குமிடமாகிய திருச்சூருக்கு அடுத்த சூபந்தி என்ற கிராமத்துக்கு அனுப்பி வைத்தார். திரளாக கூட்டத்தினிடையேமணமகன் படத்திற்கு மணமகள் மாலை சூட்டினர். புதுமாதிரியான மேற்படி கலியாணம் மாப்பிள்ளையின் உத்திரவுப் பிரகாரம் நடந்திருக்கிறது.

தன்னுடைய புருஷனிருக்குமிடமாகிய சிங்கப்பூருக்கு மணமகள் சீக்கிரத்தில் புறப்பட்டுப் போய்ச் சேருவாளெனத் தெரிகிறது.

## காலத்தின் கோலம்.

சான்பிரான்சிஸ்கோ என்னுமிடத்தில் மிஸ் கிவிற் என்னும் பெண் தன் பிதா தனக்கு 20 லட்சம் பவுண் பெறுமதியான சொத்தை முதிசமாயும் தான் பருவமடையும்வரையும் தன் தாய்க்குச் சீவிய உரித்துங்காட்டி மரணசாதனம் எழுதிவைத்துவிட்டு இறந்ததாகவும் தன் பொருளில் அவாவுற்றுத தன் தாயானவள் தன்னை உலக அநுபவம் தெரியாதவிதமாய் தன் வயதுச் சிறுவர் சிறுமியருடன் விளையாட விடாததுமல்லாமல் சில வைத்தியரைக் கொண்டு தான் கர்ப்பந்தரியாவண்ணம் தனக்குச் சத்திர வைத்தியமும் செய்வித்ததாகவும் ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி ஓர் வழக்குத் தொடர்ந்திருக்கிறாள். கோட்டார் தாய்க்கும் டக்டர்மாருக்கும் விருந்து பிறப்பித்திருக்கிறார்கள்.

முழக்கி ஆராதித்தனர் அவ்வளவில் திருத்தேர் நீர்கொழும்பு சாய்ப்புத் தெரு வழியாக சன் மேரிஸ் தேவாலயத்தைத் தாண்டியபின் தேரைச் சுற்றிலும் மின்சார வெளிச்சங்களாலும் கிற்சன் லாம்புகளும் தீவெட்டிகளும் நிரை நிரையாகச் செல்லவும் இரவு 7மணிக்கு கோட்டிக்கு அணித்தாய் உள்ள மைதானத்தில் 2 மணி அளவாகப் பல ஆடல் பாடல்களும் வாண வேடிக்கைகளும் நடத்தியபின் திருத் தேரானது பொலிஸ் நாணம் மார்க்கமாக வந்து முத்துமாரி அம்மன் சேரியைச் சேர்ந்தது அவ்வமயம் கூடி இருந்த சிவ பக்தர்கள் யாவரும் சுவாமிக்கு தோத்திரம் செய்து நின்றார்கள்.

# நமது முன்னேற்றம்.

(சித்தாந்தம்: மாசித்திங்கள்)

முன்னேற்றம் என்பது ஒரு குறிக்கோள் எதிரில் இருப்பதையும அக்குறிக்கோள் மலையுச்சிபோல் முடன்று அடையத்தக்கதாய் உள்ளதையும் சுட்டும். 'நமது முன்னேற்றம்' என்பதைப்பற்றி எண்ணுகையில், நாம் யார் என்னும் கேள்வி எழும். இக்கேள்வியை அறிவுபடைத்த ஒவ்வொருவரும் கேட்டே தீரல்வேண்டும். இதனையும், நாம் வந்தவாறு எங்ஙனே என்பதையும் நாம் போமாறு ஏதோ என்பதையும்; ஒரு சிறிதும் அறிந்துகொள்ளக்கருதாமல் பிறபொருள்களையும் உயர்ந்தோர்களையும்பற்றி முடிவின்றி ஆராய்ந்துகொண்டு வாழ்நாள் முழுவதும் கழித்தல்சிறப்புடையதாகாது. இவற்றை எல்லாம் ஆராயப்புகும் நாம் யார் என்னும் விசாரணையைத் தள்ளி வைத்தல் மேலோர்க்கு முடியாது.

சைவ சாத்திரங்கள் தரும் உத்திகொண்டு ஆன்மாவின் உண்மையை ஆராயப் புகுவோமானால் அது ஒன்று உலகத்தை அல்லது உடலை பற்றுக்கோடாய்க் கொண்டு நின்று எதைச் சார்ந்து நிற்கின்றதோ அதனவண்ணமாய் விளங்கும் இயல்புடைய அறிவுப்பொருள் என்னும் முடிவிற்கு வருவோம். இப்படிப்பட்ட ஆன்மாக்கள் எண்ணில்லாதனவாய் நித்தமாய் அஞ்ஞான இருட்டில் அழுந்தி உழன்று மெய்ஞ்ஞான நெறிக்குவரும் செலவினையுடையவையாய் படிப்படி முன்னேற்றமடைந்து வரும் மாபெரும் காட்சியும் ஒருவாறு புலனாகும்.

இத்தகைய உயிருக்கு, உடம்பொடு கூடாது ஒரு செயலுமற்று மங்கிக் கிடந்த நிலையொன்றும் உடம்பொடு கூடித் தொழில் பல புரியுநிலையொன்றும்; உடம்பு தொடக்கற்று எல்லாநலமும் நிரம்பிய நிலையொன்றும் ஆக மூன்று நிலைகள் ஒன்றன்பின் ஒன்றாய் வாய்க்கின்றன இம்முறையில் நமது ஆன்ம முன்னேற்றம் அமைந்துள்ளது. கேவல நிலை எனப்படும் முதல் நிலையைக் கடந்து உடலிலிருந்துகொண்டு உலகில் தொழிற்படும் சகலநிலையில் நாமுள்ளோம், இந்நிலையிலிருக்கும்போதே முதிர்ந்த சுத்த நிலையாகிய மூன்றும் நிலையைநோக்கிச் செல்வதே நமது முன்னேற்றத்தின் போக்காகும்.

இரண்டாவது நிலையிலுள்ள உயிர்கள் பலவேறு தரத்திலுள்ள உடல்களில் வாழ்கின்றமை கண்கூடு. பல்கள் உடம்பில் வாழுமுயிர்கள் எல்லாம் மக்களினம் எனனும் ஓரினத்தைச் சேர்ந்திருப்பதால் தம்முள் ஒத்தவை என்றாலும் ஒரே காலத்தில் எல்லா நலங்களிலும் ஒரே அளவு முதிர்ந்தவையாக இவை காணப்படுவதில்லை. இந்நலங்களில் அறிவு ஆற்றல் அன்பு இன்பம் என்னு நான்கும் மக்களிடத்தில் எந்த அளவில் நிரம்பியுள்ளனவென்று ஆராயுங்கால் அவர்களிடையே மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் உளவென்பது வெளியாகும்.

அறிவின் முன்னேற்றத்திற்கு அளவு கூறமுடியவில்லை. காலதேசங்கட்குட்பட்டு மனத்திற்கு சில பொருள்களைச் சுட்டியறியும் அறிவில் தொடங்கி, காலதேசாந்தரங்களைக் கடந்து சுட்டற ஒருங்கே யாவையும் அறியும் அறிவுவரை அறிவின் முன்னேற்றம் உள்ளது. நினைக்கும் பலவற்றில் ஒரு சிலவற்றை அதை குறையாய் முடிக்கும் ஆற்றலில் தொடங்கி வளர்ந்து, சங்கற்ப மாத்திரையில் நினைத்தவெல்லாம் நினைத்தபடி செய்து முடிக்கும் வரம்பிலாற்றல் வரையில ஆற்றல் முன்னேற்றம் செல்லும். தனக்குப் புறம்பட இதஞ் செய்யுங் குடும்பத்தாரைக் கடந்து மேற்போகாத அளவில் அன்பு தொடங்கி, ஒருவன் 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாள'னாக முதிரும் எல்லை நோக்கி அன்பு முன்னேற்றம் உளதாகும். காலதேச வர்த்தமானங்களினால் கட்டுண்டு, அசுத்தமும் துன்பமும் கலந்து அளவுபட்டு, தெவிட்டுவதுமாகிய அற்ப இன்பத்தில் தொடங்கி, நித்தியமாய், சுத்தமாய், துன்பக் கலப்பில்லாததாய், தெவிட்டாததாயுள்ள பூரணசுகமாய் ஆழ்ந்தகன்றுள்ள நிலையை நோக்கி இன்ப முன்னேற்றம் இயங்கும்

ஒவ்வொரு மனிதனும் மேற்காட்டிய முறையில் புலப்படும், அறிவு, ஆற்றல், அன்பு. இன்பங்களின் முதிர்நிலைகளைத் தன் குறிக்கோளாகக் கொண்டு, அவற்றில் முன்னேற்றமடைய இடைவிடாமல் அறிவார்ந்த முயற்சி செய்யவேண்டும். இவற்றின் பூரண உயர்விற்கும் நாம் இதுவரை எட்டியுள்ள அளவிற்கும் எவ்வளவு தொலைவு இன்னும் உளதென்பதையும், நம்மினும் மிக்கார் பலர் ஒவ்வொரு துறையிலும் உளர் என்பதையும் நன்றாய் உணரவேண்டும். முன்னேற்றம் ஏதும் நாடாது சும்மா இருந்தால் போதாதோ என்றால், அப்படி மடங்கிக்கிடக்கவொட்டாது, நம்மகத்துள்ளிருந்தே ஏதோ ஒன்று நம்மை இக்குறிக்கோள் மூகமாக உந்திக் கொண்டேயிருக்கின்றது நம்மின் மிக்காரைக் காணும்போதும் வேறு பல இன்ப துன்ப நிகழ்ச்சிகள் உண்டாம் போதும் நம் குறைபாடு நமக்குத் தோன்றுகின்றது. இவ்வுணர்ச்சி, பக்குவங் குறைந்தாரிடத்துக் குறைவாகவும் அது மிகுந்தாரிடத்து மிகுதியாகவும் காணும் கற்கவேண்டிய பெரு நூல்களைக் கற்பதாலும் கற்றதைபபற்றிச் சிந்தித்துத் தெளிவதாலும் பெரியரோடு பழகுவதாலும் மனிதன் அறிவு வளமபெறும். பிரபஞ்சத்தின பரப்பும் மாண்பும் அது பரம்பொருளைத் தன் உயிராய்க் கொண்டிருக்கும் பான்மையும் அவ் வளப்பரும பிரபஞ்சத்தில் தனி மனிதனுக்குள்ள இடத்தின் சிறுமையும அவனுக்கும் உலகிற்கும் அவனொத்த பிற உயிர்கட்கும் அவனுக்கும் பரம்பொருளுக்கும் உள்ள தொடர்புகளும் வர அவன் மனத்தில் நன்கு விளங்கும். திறவோர் காணும் காட்சி பூரணமாய் எப்போது நமக்குக் கிடைக்கும் என்னும அவா முறுகியெழும்.

இத் தரிசனமும், இதன பயனாக வரும ஆற்றலும, அன்பும், இன்பமும் மிகவும் விழுமிய பொருள்களாம். இவை நமக்குச் சித்திக்க வேண்டுமானால், இயம நியமப் பழக்கங்களாகிய ஒன்றிவாதம் முதலியன நம் அன்றாட வாழ்வில் நிலை பெற நாட்டப்படல் வேண்டும். மூர்த்தி வழிபாடு முறுகி வளர வேண்டும். இதற்கெல்லாம், அநுபூதிமான்கள் கூட்டுறவு, நோக்கவோ, அதுகிடைக்காவிடத்து அவர் அருளிய வாக்கின் மூலமாகவோ, நாள்தோறும் நம்மைத் தூய்மைப்படுத்தி வருதல் பெரிய உதவியாயிருக்கும்.

இப்படிப் பகுத்தறிவுடைய தனி மனிதன் ஒவ்வொருவனும் தனது ஆன்மலாப முன்னேற்றத்துக்காக, தன் ஆலியன்றவளவு முயன்று வருவானாயின், உலக முழுதுமே முன்னேற்றமடைந்துவிடும். தனி மனிதன் தன்னை உடர்ந்தெற்கண் செலுத்த முயலாதவரையில், அவன் பிறரை அந்நெறியிற் செலுமாறு கூறவோ, கூறியவாறு செலச் செய்யவோ, சிறிதும் உரிமையும், ஆற்றலும் இல்லாதவனேயாவன். ஆதலால், நமது தனிவாழ்க்கையை எல்லா நற்றுறைகளிலும் நாள்தோறும் வளமையச் செய்வதே நமது முன்னேற்றத்தின் முதற்படியாயுள்ளது.

ஆனால் எம்மனிதனும் தன்னளவில் என்றுமே தனித்து நின்றுவிட இயலாது. தான் வாழும் சமூகத்திற்கும் தனக்கும் பிரிக்க முடியாத தொடர்புண்டு. அவனது நலந் தீங்குகள் சமூகத்தையும் சமூகத்தின நலந் தீங்குகள் அவனையும் பாதிக்கும். தனிமனிதனுக்கும் பிற உயிர்கட்கும் உலகிற்கும உள்ளே ஒரே பேருயிர் தழைத்து நிற்பதால ஒருவன் பிற உயிர்களின் முன்னேற்றத்தையும் நாடியேயாகவேண்டும் தனது முழு முன்னேற்றம் பிற முன்னேற்றத்தையும் ஏனவெல்லாம் தேயிருக்கின்றது. ஆதலால் ஒவ்வொரு மனிதனும் இப்படித் தன் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டாகவேண்டும்.

—(தொடரும்)

## ஊர்காவற்றுறைப் பகுதிப் பிரதிநிதிக்கு உபசாரணைகள்.

எதிரிடையின்றி ஊர்காவற்றுறைப் பகுதிக்கு அரசாங்கசபைப் பிரதிநிதியாகத் தெரிவு பெற்ற ஸ்ரீமான் வை. துரைசுவாமி யவர்களை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள் உபசரிக்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டு இந்தப் பிவர்வரி௴ 5உ புதன்கிழமை பின்னேரம் நாலரை மணி வரையில் மேற்படி கல்லூரி மண்டபத்தை விசேஷமாக அலங்கரித்து ஒரு சபை கூட்டி அச்சபையில் இந்துக்கல்லூரி அதிகாரசபையார் இக்கல்லூரியின கீழ் வித்தியாசாலையின் ஆசிரியர் முதலியோரும் கல்லூரி ஆசிரியர்கள் மாணவராகிய சகலரும் சமுகமாயிருந்தனர். பின்னர் ஸ்ரீமான் துரைசுவாமியவர்களைக் கல்லூரிப் பிரதமாசிரியர் முதலானோர் வரவேற்று அழைத்துச்சென்று மேன் மண்டபமேடையில் இடப்பெற்ற ஆசனத்தி லிருத்தியபின தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. கல்லூரித் தலைமையாசிரியராகிய ஸ்ரீ A. குமாரசுவாமியவர்களே சபைத் தலைமை வகித்தனர். சபைத் தலைவர் சில குறிபபுரை கூறியபின் மேற்படி கல்லூரியாசிரியர்களுள் ஒருவராகிய ஸ்ரீ S. சிவப்பிரகாசமவர்கள் உபசரணைப் பத்திரத்தை வாசித்துப் பிரதிநிதியவர்கட்கு அளித்தனர். அதன் பின் அதிகாரசபையில் அக்கிராசனராகிய சமாதான நீதிவான் ஸ்ரீ அ. நாகநாத முதலியார் பிரதிநிதியவர்களின் திறமைகளையிட்டுச் சில கூறினர்; அதன்மேல் இக்கல்லூரியின் ஆசிரியருளொருவராகிய ஸ்ரீ V. நாகலிங்கமவர்கள் கொக்குவில் சைவாங்கில வித்தியாசாலைத் தலைமையாசிரியராகிய ஸ்ரீ மு. கார்த்திகேசு அவர்கள் வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலைத் தலைமையாசிரியராகிய ஸ்ரீ மு. சபாரத்தினசிங்கமவர்கள் இந்துக்கல்லூரித்தமிழ்ப் பண்டிதராகிய ஸ்ரீ ம. வே திருஞானசம்பந்தப் பிள்ளையாகிய இவர்கள் பிரதிநிதியவர்களுடைய சுகுணம் திறமை அரசியல்ஞானம் நிலை திறம்பாமையென்னுமிவைகளை வியந்து பாராட்டிப் பேசினார்கள். ஈற்றில் பிரதிநிதியவர்கள கல்லூரி ஆசிரியர்கள் தமக்குச் செய்த உபசரணையின் பொருட்டு நன்றி கூறினர். 6 மணி வரையில் தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

## அராலியில் உபசாரணை.

அராலி வாணிவிலாச சபை ஆதரவில் (26-1-36) ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணியளவில் வட்டுக்கோட்டைக் கிராமச் சங்கத் தலைவர் ஸ்ரீ சி. வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையில் அராலி அம்மன்கோவில் மண்டபத்தில் திரு. வை. துரைசுவாமி அவர்கள் போட்டியின்றித் தேரிவுசெய்யப் பெற்றமையையிட்டு உபசரிக்கும்நோக்கத்துடன் ஒருவரவேற்பு மகாநாடு கூடியது. முதலாவது அம்பாளுக்குப் பூசை நடைபெற்றதும் மகாநாட்டுத் தலைவரால் பிரதிநிதி யவர்களுக்கு மாலை சூட்டப்பெற்றது. பின்பு மேளவாத்தியத்துடனும் விருதுச் சின்னங்களுடனும் பிரதிநிதியவர்கள் மோட்டர் ரதத்தில் அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்திற்கு அழைக்கப்பெற்றர். அங்கு அப்பெருமானுக்குப் பூசை முடிந்ததும் பிரதிநிதியவர்களுக்கு மாலைகள் சூட்டப்பெற்றன; பின்பு உபசாரணைக் கூட்டத்திற்காக அலங்கரிக்கப் பெற்றிருந்த அராலி சரஸ்வதி வித்தியாசாலைமண்டபத்திற்கு அழைக்கப்பெற்றர். பிரதிநிதியவர்கள் மேற்படி மண்டப வாசலில் வந்ததும் சபை உப அக்கிராசனர் திரு. மு. சின்னத்துரையவர்களால் மாலை சூட்டப்பெற்று வரவேற்கப் பெற்றர். தாசில்தார் திரு. ச. கதிரவேற்பிள்ளை யவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தில் தேவார பாராயணத்துடன் மேற்படி வித்தியாசாலையில் உபசாரணைக்கூட்டம் ஆரம்பமாயது. பிரதிநிதியவர்களுக்கு திரு. அ. தில்லையம்பலமும் அக்கிராசனருக்கு திரு. ச. அருணாசலமும் மாலையிட்டனர். முதலில் அக்கிராசனரின் கேள்விப்படி 5-ம் ஜோர்ஜ் மரணத்தைக் குறித்து 5 நிமிஷங்கள் அநுதாபங் கொண்டனர். பின்பு ஆசிரியர் திரு. வி. நாகலிங்கம் சில வந்தனப் பாக்களைப் பாடிச்சபையோரை மகிழ்வித்தனர். அடுத்ததாக அக்கிராசனரின் முன்னுரை முடிந்ததும் சபைத் தனுதிகாரியவர்களால் பிரதிநிதியவர்கள் போட்டி யின்றித் தேரிவுசெய்யப் பெற்றமைக்காக உபசாரப்பாக்கள் பாடி வழங்கப் பெற்றன. பின்பு சபை அக்கிராசனர் திரு. ச. முத்தையா ஆசிரியர் திரு. மு. சதாசிவம், திரு. சு. இரத்தினம், திரு. இ. சின்னையா, திரு. நா. பாலசந்திரவிநாயகர், வழக்கறிஞர் திரு. ச. நாகலிங்கம், திரு. மு. கதிரவேலு முதலியோரால் திருவாளர் வை. துரைசுவாமி யவர்கள் போட்டியின்றித் தேரிவுசெய்யப் பெற்றமைக்குக் காரணமாய் அவரிடத்துள்ள துணிசயங்களும் அவர் ஆற்றிய ஆற்றவிருக்கும் தொண்டுகளும் விளக்கிக் காட்டப்பெற்றன. அதன்பின் பிரதிநிதியவர்கள் தம் அபிப்பிராயத்தை விளக்கிக் காட்டினர். பின்பு அக்கிராசனரின் பின்னுரையால் சபையோர் ஆனந்தமும் அதிசயமு மடைந்தனர். ஈற்றில் சபைக்காரியதரிசி திரு. சி. செல்வத்துரை அவர்கள் துதி கூற, கூட்டம் தேவார பாராயணத்துடன் இனிது நிறைவேறியது. அதன்பின்பும் வரவேற்பு மகாநாட்டார் பிரதிநிதியவர்களை மோட்டர் இரதத்தில் மேளவாத்திய சகிதமாக அராலிக் கிராமத்தைச் சுற்றியழைத்துச்சென்று பின்பும் அம்மன் கோவிலை யடைந்ததும் சபைப் போஷகரைக்கொண்டு துதி கூறுவித்துத் தம் இல்லம் ஏக விடுத்தனர். சுற்றுப் பிரகாரத்தின்போழ்து பிரதிநிதியவர்கள் பல பிரபுக்களால் மாலைகள் சூட்டப்பெற்று உபசரிக்கப்பெற்றனர்.

நிருபர்.

# நாற்றிசைநோக்கு.

(வாஸவன் வரைவது.)

சபர்மதி முனிவன் மகாத்மா காந்தியடிகளுக்கு ஓர் புத்திரபாக்கியம் உண்டு; இதன்பெயர் ஹீராலால்காந்தி; இதன் நடைவடிக்கைகள் அடிகளார்க்குச் சற்றும் பிடிப்பதில்லை. அதற்கும் அடிகளின் சண்டிப்பான வாழ்க்கை உவப்பானதல்ல; சென்ற 17 வருஷகாலமாக தந்தைக்கும் புத்திர பாக்கியத்திற்குமிடையே அபிப்பிராய பேதம் இருந்து வந்திருக்கிறது. கட்டாமட்டித்தனமானவை எனப்படும் இதன் செயல்களினால் இதனை நல்லார் பெரியார் அடுப்பதில்லை. எனவே இது இப்போது ஹிந்து சமூகத்தையே வெருட்டுகின்றது இப்படித் தன்னையாரும் இனிமேலும் அடுக்காவிட்டால், தான் இனி புறமதம் புகுந்துவிடும் என்று இதைப் புத்திரசிகாமணி உம்மாண்டி காண்டுகிறது. டக்ரர் அம்பட்கார்க்குத் தகுந்த ஜோடியே இதுவும்.

ஃ ஃ ஃ

வடமாகாணம் எங்கணும் இப்போது சிவப்புக்கொடிகளும பச்சைக்கொடிகளும் தொங்கிய வண்ணமாய் இருக்கின்றன. ஆனால் கொடிகளின் எண்ணிக்கையைக் கொண்டு அவ்வக்கொடியுடையோரின் வெற்றி தோல்வியை இப்போது சொலல முடியாது, பச்சைக்கொடி தூக்கிக்கொண்டு சிவப்புக்கொடிக்கும் பன்னூற்றுக்கணக்கில் வீட்டில் சிவப்புக்கொடி வைத்துக்கொண்டு பச்சைக் கொடிக்கும் மும்முரமாகவேலைசெய்வோரை அடியேன என் கண்ணாரக் கண்டிருக்கிறேன்.

ஃ ஃ ஃ

இத்தேர்தல் விஷயமாக அடியேன் சொல்லக்கூடியது இதுவே. சுயநலப் புலிகள், தம் சுயநலத்தைப் பூர்த்திபர்க்கற்காக நிதானமான கொள்கையின்றி பச்சோந்திபோல அடிக்கடி தம் கொள்கையை மாற்றிக்கொண்டு வருபவர்கள், பேசுவது எழுதுவது ஒன்றாய், நடப்பது பிறிதொன்றாய்க் கர்மம் ஆற்றுபவர்கள், தம் கட்சி வெல்லும பொருட்டு நியாயம் நீதி இன்றிப் பலாத்காரத்தை உபயோகிப்பவர்கள், உனக்கு முன் கிளைக்கும் நாளும் உண்டியும் வாழ்வும் இங்கே மனக்கருத்தங்கே என்றுங்கு செய் நன்றி கொன்றவர்கள், நிமிஷத்திற்கு நிமிஷம் தம் மனத்தை மாற்றுபவர்கள், இவர்களுக்கு ஆதரவு ஒருபோதும் செய்யவொண்ணாது; அரசியல் விஷயத்தில் அடிக்கடி குட்டிக்கரணம் செய்வோர்க்கு யாழ்ப்பாணத்தில் இனி இடம் இல்லை என்பதை மகாஜனங்கள் காட்டவேண்டியது ஆவசியகம் என்க.

ஃ ஃ ஃ

கொழும்பிலே "டெயிலி நியூஸ்" என்னும் சிங்களரால் வைத்தநடாத்தப்படும் பத்திரிகை யொன்றுண்டு. அப் பத்திரிகையின் விசேஷ நிருபர் நமது யாழ்ப்பாணத்திற்கும் திருக்காட்சி கொடுத்துத் தேர்தல் நிலைமையை அவதானித்து 4 பந்தி கொண்ட கட்டுரையைச் சென்ற 11-ம் தேதிப் பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். இந்த மேதாவி, காங்கேசன்றுறைப் பகுதித் தேரிவு விஷயமாகச் சொல்லுமிடத்து, ஸ்ரீமாந். சு. நடேசபிள்ளை ஓர் பிராமணன் என்கிறார். இது எமக்கும் ஸ்ரீ நடேசபிள்ளைக்கும் புதினமே.

ஃ ஃ ஃ

இச் சிங்களப் பத்திரிகையின் விசேஷ நிருபர் தம் கட்டுரையினால் பின்வருவோரையே ஆதரிக்கின்றார் எனத் தெரிகிறது (1) திரு. ஜெனின்ஸ், (2) திரு. பாலசிங்கம், (3) திரு. பொன்னையா. இதன காரணம் என்ன?

## 80 வருடம் குளிக்காதிருந்த மனிதன்.

லண்டன் தர்ம ஆஸ்பத்திரிக்கு ஓர் 80 வயதுக் கிழவர் ஏதோ நோய்க்குச் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக வந்திருந்தார். அந்த மனிதன்மீது துர்க்கந்தம் வீசியதால் அந்த ஆஸ்பத்திரியின் டக்ரர் எட்லின் என்பவர் முதன் முதலில் அவரைக் குளிப்பாட்டிக் கொண்டுவரும்படி நேர்ஸ்களுக்கு உத்தரவிட்டார். இதைக் கேட்ட அக் கிழவர் சத்தமிட்டு, இதுவரை தாம ஒருநாளும் குளித்ததில்லையென்றும், குளிப்பாட்டினால் தாம் உடனே இறந்துவிடக்கூடுமென்றும் கத்தினர். எனினும், நேர்ஸ்கள் அவரை வலிய இழுத்துச் சென்று உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு, வெதுவெதுப்பான வெந்நீரில் குளிக்கச் செய்தனர். ஆனால் அவர் உடலில் வெந்நீர் பட்டவுடன் அவர் கண்கள் மூடிக்கொள்ளத் தொடங்கிச் சிறிது நேரத்திற்கெல்லாம் உயிர் பிரிந்துவிட்டது. டக்ரர் எட்லின் அதைக் கேள்விப்பட்டதும் ஆச்சரியமடையாமல், இக் கிழவனைப்போன்ற மனிதர்கள் சிலர் நீண்ட காலம்வரை குளிக்காமல் இருக்கிறதைத் தாம் கண்டிருப்பதாகக் கூறினர்.

## 94 வயதில் குழந்தைபெற்ற தந்தை.

வடக்குக் கலிபோர்னியா நியூபெர்னைச் சேர்ந்த மிஸ்டர்- ஜார்ஜ் ஷியூஸ் என்பவருக்கு வயது 94; அவருக்கு முதல் மனைவியின்மூலம் 16 குழந்தைகள் பிறந்திருக்கின்றன, அம்முதல்மனைவி இறந்த பின் 27 வயதான ஒருஸ்திரியை இரண்டாவது தாரமாகக் கலியாணஞ் செய்து கொண்டார். இப்போது அவருக்கு ஓர் ஆண் குழந்தைபிறந்திருக்கிறது. 94 ம் வயதில் அவருக்குக் குழந்தை பிறந்த விஷயம் ஆச்சரியமானது என்று கூறப்பட்ட போது, அமெரிக்க வைத்திய சங்கத்தைச் சேர்ந்த நிபுணர்கள் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லையென்று கூறிவிட்டனர். நியூயார்க் மருந்துஆராய்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் இயாகோ கிளாஸ்டன் என்பவர் பின்வரும் விஷயத்தைக் கூறி 94 வது வயதில் குழந்தைக்குத் தந்தையாவதில் ஆச்சரியமில்லையெனமறித்து விட்டார். "ஐயலாந்தைச் சேர்ந்த ஜான் இல்லே என்பவர் 1913 இல் அகஸ்டா எனறவிடத்தில் மாணமடைந்தார். அவர் 120 வயது வரைபூரண ஆண்மைஉள்ளவராகவே இருந்து குழந்தைகள் பெற்று வந்தார்; அதனுடன் 104 வது வயதில் குழந்தைகளுக்குத் தந்தையானவர்கள் இருவர் இருந்திருக்கின்றனர்."

## எட்வேட் அரசர் மகுடாபிஷேகம்.

நமது எட்டாவது எட்வர்ட் மன்னர்க்கு வருகிற ஆண்டு மேமாதத்தில் இங்கிலாந்திலே மகுடாபிஷேகம் நடக்கும்,

# பொலிசாரை ஏமாற்றியவன்!

## உளவறியவந்தவர்க்குக் கடுங்காயம்.
## அல்வாய் எதிரிக்கு கடுங்காவற் சிறை

## சுப்பிறீம்கோட்டில் விசாரணை விபரம்.

(நமது நிருபர்)

அல்வாயில் வசித்த சிதம்பரம் என்னும் மூதாட்டியைக் கொலை செய்ததெனப்படும் வழக்குச்சம்பந்தமாகப் புலன்விசாரிக்க வந்த துப்பறியும் பொலிஸ் சார்ஜன்ற் மெனேன் என்பவரை ஏமாற்றி அழைத்துச் சென்று கற்பாறையில் தள்ளி அவர்க்குத் தேகதீங்கு விளைத்தான் என ஒரு வழக்கில் எதிரியாயிருந்த சங்கரப்பிள்ளை வல்லிபுரம் என்பவன் யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டிற் சென்ற திங்கட்கிழமை குற்றஞ் சாட்டப்பட்டான்.

முடிக்குரிய நியாயவாதி A. H. R. வீரசூரியா வழக்கை நடாத்தினார். நியாயவாதி ஸ்ரீ S. D. தப்புவும் பிறக்ரர் ஸ்ரீ T. C. இராசரத்தினமும் எதிரிக்காக ஏற்பட்டனர்.

விசாரணையில் துப்பறியும்பொலிஸ் சார்ஜன்ற் மெனேன் பின்வருமாறு கூறினார்:-

"நான் சென்ற வருஷம் பங்குனி மாதம், சிதம்பரமென்னும் மூதாட்டியின் கொலையைப்பற்றி உளவறிய பருத்தித்துறைக்கு அனுப்பப்பட்டேன். இந்த எதிரி அந்தக் காலத்திற் பொலிஸ் பாதுகாப்பில் இருந்தவன். இவனை நான், உளவறியும் நோக்கமாகப் பல தடவைகளில் சிறையில் இருந்து கூட்டிச் சென்றிருக்கிறேன். ஒரு நாள் இவன் தான் ஏதோ பருத்தித்துறைப் பொலிஸ் நீதிபதிக்குக் கூறவேண்டுமென்றும், அதன் பொருட்டு அவரிடம் தன்னை அழைத்துச் செல்லவேண்டுமென்றும் என்னைத் தனக்கவே கேட்டான். நான் அதற்கு உடன்பட்டுக் கூட்டிச் செல்லும் போது, சிதம்பரத்தின் பொருள்களை தான் ஓர் பெட்டிக்குள் வைத்து கடற்கரையோரத்தில் புதைத்து வைத்திருக்கிறதாகவும், அதனை எனக்குக் காட்டுவதாகவும் எனக்குக் கூறினான். அவன் கூற்றை நம்பி, நான் இவனைக் கடற்கரையோரமாகக் கூட்டிச் சென்றேன். அங்கே எதிரி பல இடங்களில் தோண்டிப் பார்த்து விட்டுக் காணவில்லையென்றான். இவன் உண்மை சொல்லுகிறான் என நான் நம்பியமையினால் தான் அவனுக்கு விலங்கு இடாது அழைத்துச் சென்றேன். இதன் பின் நாம் இருவரும் திரும்பி வந்தோம். வழியில் எதிரி ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தான். நான் அவனைத் துரத்தினேன். இப்படி கால் மைல் தூரம் ஓடினேம்; இதன் பின் நான் களைத்து விட்டேன். சற்றில் அவனை நான் அகப்படுத்தி விட்டேன். அப்போது அவன் என்னைத் தள்ளிவிட்டு ஓடினான். அந்த நேரத்திலே கடற்கரையோரத்துள்ள கட்டிடத்துக்கிட்ட நின்றமையினால் நான் அக்கட்டின் விளிம்பிற் சென்று கடலுக்குள் விழாதபடி தெண்டித்தும் வாய்க்காது கீழே கல்லின் மீது விழுந்தேன். இந்த நேரத்தில் நான் எதிரியைக் காண முடியவில்லை. தூரத்தில் நின்றவர்களை எனது உதவிக்கு அழைத்தேன் ஒருவரும் வரவில்லை. அதன் பின் குளிக்கக் கரத்தில் வந்த ஒருவரை மறித்துச் சம்பவத்தைப் பொலிசாருக்கு அறிவிக்கும்படி கூறினேன்.

"நான் கொழும்பு ஆஸ்பத்திரியிற் 15 நாட்கள்வரையில் இருந்தேன். 80 நாட்கள் வரையில், நான் கடமை பார்க்கப் போக முடியாமல் இருந்தேன்.

"எனது காலில் காயம் ஏற்பட்டது அக்காயத்தை மாற்றியது சுதேச வைத்தியரேயன்றி மேனாட்டு டக்ரரான திரு சோமசுந்தரம் அல்ல"

இதன் பின், டக்ரர் சோமசுந்தரம் சந்தியா, வல்லிபுரம், முருகுப்பிள்ளை என்பவர்கள் சாட்சியம் பகர்ந்தனர்.

நீதியாசர் எதிரிக்கு 1 வருஷக் கடுங்காவற் சிறைத்தண்டனை விதித்தார்.

## இந்து மதத்தைத் தழுவிய ஆங்கிலமாது.

திருவளர் செல்வி மேரி ஒல்ட்பில்ட் என்னும் ஆங்கிலப் பெண்ணும் திருவளர் செல்வன் கிருஷ்ண என்னும் வாலிபனும் கென்சிங்டனிலுள்ள ஓவிய கலாசாலையில் 1926ம் ஆண்டு தொடக்கம் கல்வி பயின்று வந்தனர். இருவரும் 1930ம் ஆண்டு நடந்த பரீட்சையில் சித்தியெய்தினார்கள். அந்நாட் தொடக்கம் ஒருவரையொருவர் காதலித்தனர். தற்போது அவர்களிருவருக்கும் லாகூரில் விவாகம் நடைபெறப் போகின்றது. அப் பெண்மணி இந்துமதியென்னும் நாமத்துடன் சைவசமயத்தைத் தழுவுகின்றனள். விவாகமும் சைவ சமய விதிப்படியே நடக்கும்.

## 'ஹிட்லர் வீழ்க.'

அபேதவாதிகள், பொது உடைமைக்காரர், தொழிலாளர் முதலியோர் சுமார் நூறுபேர் செங்கொடிகளையும் அறவடைக் கத்திகளையும் ஏந்தி பம்பாய் ஜெர்மன் ஸ்தானிகர் காரியாலயத்திற்கு எதிரில் போய் 'ஹிட்லர் வீழ்க' 'ஏகாதிபத்யத் திமிர் ஒளிக!' என்று கூட்டமிட்டனர். இந்தியாவைப்பற்றி ஹிட்லர் அவதூறாகப் பேசியதை எதிர்த்து இவ்வார்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தைப் பற்றிய தகவல் தெரிந்து பொலிசார் வந்து கூட்டத்தைக் கலைத்தனர். பொலிசார், ஸ்தானிகர் காரியாலயத்தைக் காவல் காத்து வருகின்றனர். இச்சம்பவத்தை யெதிர்த்து ஜெர்மன் ஸ்தானிகர் காரியாலயத்தார் பம்பாய் அரசினருக்கு எழுதியிருக்கிறார்கள்.

## டிவலேரா மகன் மரணம்

ஐரிஷ் குடியரசுத் தலைவரான மிஸ்டர் ஈமன்டிவேலராவின் 20வயதுப் புத்திரனான பிரயன் டிவேலரா குதிரையேறிச் சவாரி செய்யும் போது சென்ற 9உ கீழ்விழ்ந்து மரணமடைந்தார்.

## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 பந்தி | (கலம்) | ரூபா | 10-00 |
| ½ ,, | ,, | ,, | 5-50 |
| ¼ ,, | ,, | ,, | 3-00 |
| 1 அங்குலம் | | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள், விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை.

## தீண்டாமை வேண்டாம்

### ஹரிஜன சேவாசங்க நடவடிக்கை

### ஆலயப் பிரவேசத் தீர்மானம்.

ஹரிஜன சேவாசங்க மந்திரி சபைக்கூட்டம் சென்றவாரம் டெல்கியில்கூடியது. ஹிந்து மதத்தை விட்டுப் போய்விடுவதாக டக்டர் அம்பேத்கார் பயமுறுத்துவதைக் கண்டு அங்கத்தினர்கள் கவலைப்படவில்லை. ஆனால் ஹரிசனங்களிடையே அதிருப்தி வளருவதற்காகவே அவர்கள் வருந்துகிறார்கள். ஹிந்து மதத்தில் ஹரிஜனங்களுக்குச் சரியான நியாயம் வழங்கவேண்டுமென்றே அங்கத்தினர்கள் கவலைப்படுகிறார்கள்.

கேரளத்திலிருந்துவந்த ஸ்ரீமான் ஜி. ராமச்சந்திரன ஹரிஜன ஆலயப் பிரவேச சம்பந்தமாக ஒரு பிரேரணை கொண்டுவந்தார். அவர் தாம் அதை குறையான மனதுடன் இப்பிரேரணையைக் கொண்டு வரவில்லையென்றும், கேரளத்தில் ஆலயப்பிரவேச சம்பந்தமாக, உள்ள கஷ்டம் இன்னதென்று தமக்குத் தெரியுமென்றும், ஆலயப்பிரவேச உரிமை அளிக்காவிட்டால், கேரளத்தில் ஹரிஜன வேலை நடக்க இடமில்லையென்றும், அகில இந்திய முறையில் ஆலயப்பிரவேச வேலையைக் கவனிக்க வேண்டுமென்றும் தம் தீர்மானத்தை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்வதாகவும் பற்பல மாகாணங்களும் இதற்காக வேலைசெய்ய வேண்டுமென்றும், சட்டசபை அங்கத்தினர்கள் அவசரமாக ஒரு மசோதா கொண்டுவர வேண்டுமென்றும், கேரளத்திலுள்ள ஹரிஜனங்கள் மற்றெல்லாவிடங்களிலுமுள்ள ஹரிஜனங்களைவிட முன்னேற்ற மடைந்திருப்பதாகவும், திருவாங்கூரிலும் கொச்சியிலும், அவர்கள் கல்வியில் அதிக முன்னேற்ற மடைந்திருப்பதாகவும், அங்கு மற்ற ஹிந்துக்களும் அவர்களின் உரிமையை மதிப்பதாகவும், குருவாயூர் விஷயத்தில் உயர் வகுப்பினரும் எவ்வித அநுதாபம் காட்டினார்கள் என்பதைப் பலரும் அறிந்திருப்பதாகவும், திருவாங்கூர் அரசினர் நியமித்த ஆலயப்பிரவேசச் சபையினரும் ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை ஆதரித்ததாகவும், கூறினார்.

கடைசியாக ஸ்ரீமான் பிர்லாவின் யோசனைப்படி பின் கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### தீர்மானம்

ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை அளிக்காது இனியும் தாமதம் செய்தால் ஹிந்து தர்மத்துக்கு விசேஷ தீங்கு நேருமாதலாலும ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை அளிப்பது நியாயமாதலாலும் ஹரிஜன சேவாசங்க மத்திய சபை ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமை அளிக்க உடனே ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் நிருவாகசபை காந்திஜியுடன் கலந்து இக்காரியத்தைக் கவனிக்கவேண்டிய காலம் வந்துவிட்டதாகவும் முதலில் தாம் தென்னிந்தியாவின் நிலைமையை நன்கு அறிந்துகொள்ளவில்லையென்றும், நிருவாகசபை இனியும் தாமதியாது இவ்வேலையை அக்கறையுடன் கவனிக்குமென்றும் ஸ்ரீமான் பிர்லா கூறினார்.

ஸ்ரீமான் எம் ஸி. ராஜா இப்பிரேரணையை ஆதரித்தார். தீண்டாமையை விலக்கவேண்டுமானால் ஆலயப்பிரவேச உரிமை அளிக்க வேண்டியது அவசியமென்றும் தாம் சட்டசபையில் கொண்டு வந்துள்ள மசோதாவால் கோயில் ஆலயப்பிரவேச உரிமை கிடைத்து விடாதென்றும் ஆனால் அதற்கு உதவியாக இருக்குமென்றும், ஆலயப்பிரவேச உரிமைக்காகத் தனியாக ஒரு மசோதா கொண்டுவரப்பட வேண்டுமென்றும், மத்யசபை தீண்டாமையை ஒழிக்க முற்பட்டிருக்கிறதென்பதில் ஆக்ஷேபமில்லையென்றும், ஆலயப் பிரவேச உரிமையை வாங்கிக் கொடுக்க அவர்கள் தீவிரமுயற்சி செய்ய வேண்டுமென்றும், இன்னமும் தாமதிப்பது சரியல்லவென்றும் கூறினார்.

# வேளாளக் கன்னி மாமேறிக் காதலன்.

## சோரநட்பாற் பிறந்தசிசு கொலை அதனை வதைத்தது யார்?

## பிரசவித்தவள் கூறிய முறைப்பாடு மாமேறிக்கு விருந்து பிறப்பித்தனர்.

[நமது நிருபர்.]

சுண்டிக்குளியைச் சேர்ந்த ஈச்ச மோட்டை என்னும் இடத்தில் வசிக்கும் செல்லம்மா என்னும் "கன்னிப" பெண் ஓர் ஆண் மகவைப் பிரசவித்து, அதனை மறைவாகக் கொலை செய்தாள் என யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டமை இப்பத்திரிகையில் ஏற்கெனவே வெளிவந்ததாகும்.

இவ்வழக்கு சென்ற செவ்வாய்க்கிழமை மீண்டும் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது ஷெ செல்லம்மா என்னும் கன்னிகை பின் வருமாறு கூறினாள்:-

"ஐயா, நான் சிசுவைப் பிரசவித்தமை உண்மைதான் யான் பொன்னுக்குட்டியென்னும் மாமேறிக்கே களப்பவதியாய்ப் பிள்ளையைப் பெற்றேன். என் அறியாமையின் நிமித்தமே இச் சிசுவை நான்தான் பெற்றேன். ஆதலால் என்னை மன்னிக்க வேண்டும். நான் பிள்ளையைப் பிரசவிக்கும் போது பொன்னுக்குட்டிதான் அருகே நின்றான். தூரத்திலும் ஓர் ஆள் நிற்கக் கண்டேன். அந்த ஆள் யார் என்று நான் பொன்னுக்குட்டியைக் கேட்க, அது ஆச்சிக்குட்டி என்பவளின் மகன் எனச் சொன்னான்.

"இது சம்பவம் நடக்க 2 அல்லது 3 நாட்களுக்கு முன், பொன்னுக்குட்டி எனது வீட்டுக்கு வந்தபோது ஏதோ எனது வயிற்றிற் செய்வதாக அறிவித்தேன்.

"கொலை செய்யப்பட்ட சிசு 2 மணியளவில் ஜெனித்தது. அது ஓர் ஆண்மகவு; உயிருடன்தான் அது பிறந்தது. பிள்ளை பிறந்த சொற்ப நேரத்தின் பின் நான் அயர்ந்து உறங்கிவிட்டேன். அதன் பின் என்ன நடந்தது என்பதை யான் அறியேன்."

இவ்வளவுடன், நீதிபதி வழக்கைத் தவணையிட்டு, பொன்னுக்குட்டி என்பவனைச் சிறைப்படுத்தும்படி விருந்து பிறப்பித்தார்.

## வீண்பேச்சு.

கோரம் என்னுமிடத்திற்கருகாமையிலுள்ள டாபி டேரவில் மூன்று இத்தாலிய விமானங்கள் வெடி குண்டுகளைப் போட்டன வென்று ஓரிக்கை கூறுகிறது; யந்திர பிரங்கிகளையும் அவர்கள் பிரயோகித்தனர் ஆனால் இவற்றால் யாதொரு பயனுமேற்படவில்லை.

செஞ்சிலுவை லாரிகளில் அபிஸீனியர் யுத்த தளவாடங்களை யெடுத்துச் செல்லுவதாக இத்தாலியர் கூறுவதில் உண்மையில்லையென்று அபிஸீனியர் சொல்லுகின்றனர். பழுதடைந்துவிட்டதாக ஸ்வீடிஷ் கோஷ்டியினர் உள்விட்ட லாரியையே இத்தாலியர் கைப்பற்றினர் என்றும் அவற்றில் யுத்த தளவாடங்களிருந்ததாகச் சொல்லுவதில் அர்த்தமில்லையென்றும் அபிஸீனியர் கூறுகிறார்கள்

## உலகம் பலவிதம்.

பஞ்சவர்ணங்களுள் பச்சைக்கும் சிவப்புக்கும் இருக்கும் மானம் இப்பொழுது ஏனைய நிறங்களுக்கு இல்லையென்று சொல்லலாம். எங்கு பார்த்தாலும் பச்சை அல்லது சிவப்பு. பச்சைக்கொடி முருகேசுவுக்கு, சிவப்புக்கொடி கதிரேசருக்கு என்று வைத்துக்கொள்ளுவோம்; இந்த விவகாரத்தை அறியாத ஒரு நாட்டு மனிதன் பனியின் பொருட்டுப் பச்சைக் கம்பளத்தால் தன்னுடம்பைப் போர்த்துக்கொண்டு வரக் காணப்பட்டால் இந்த மனுஷன் முருகேசு பக்கமென்பர் பட்டினத்திலுள்ள வழிபோக்கர்; தேர்தலிற் சிறிதும் சம்பந்தப்படாத இன்னொருவர் சிவப்புக் கம்பளியைத் தோளிற் போட்டிருந்தால் இவர் ஸ்ரீமான் கதிரேசருடைய ஆள் என்பர் கண்டவர்கள். விஷயம் இவ்வளவில் நின்றுவிடவில்லை; சிவப்பு நிறங் கொண்ட பொருள்களைக் காணுந்தோறும் பச்சை நிறப்பகுதியாருக்கும், பச்சைநிறப் பொருள்களைப் பார்க்கும்போது சிவப்புக் கட்சியாருக்கும் பெரும் ஆக்கிரம் உண்டாகின்றது. அந்தந்த நிறத்தைச் சேர்ந்த கட்சியார் மோட்டாரத்தில், துவிச்சக்கரத்தில், தங்கள் கடையில், கல்வாசலில், தெருச்சந்தியில், தகதம தலையில், கழுத்தில், மார்பில அந்தந்த நிறக் கொடிகளையேனும், துணிகளையேனும் கட்டித் தொங்கவிட்டுக் கொள்ளுகின்றனர். பசிய இலைகளைக் கொண்ட செடி செந்நிறப் பூக்களைப் பூத்தால் இது முருகேசுவுக்கது, பூ கதிரேசுவுக்கு என்றுதானும் சொல்லத்தொடங்கி விட்டார்கள்.

* * *

இவைமாத்திரமா, இல்லை! இல்லை! இந்தத் தேர்தற் காலத்திலே இன்னும் பலவேடிக்கைகள் இங்கே நடைபெறுகின்றன. பள்ளிக்கூட வாலிபர் இருவர், இச்சமையத்தில் நம்பரால் இதற்கெனச்செய்து விலைபாகும் சிவத்தத் தொப்பியை ஒருவனும் பச்சைத் தொப்பியை மற்றவனுமாகத் தரித்துக்கொண்டு தெருவாற் போனார்கள் வேடிக்கை பார்த்து வீண்கதை பேசிச் சிரித்துப் பொழுது போக்குஞ் சிலர் அந்த வாலிபர் போகுந் தெருமருங்கில் நின்றுகொண்டு, ஒருவனைக் கதிரேசுவினுடைய ஆள் என்றும் மற்றவனை முருகேசுவினுடைய ஆள் என்றுஞ் சொல்லிப் பரிகசித்தார்கள், கருமம் இவ்வளவில் நின்றுவிட்டாற் காரியமில்லை; இதைவிட அதிமானம் ஒரு சந்தர்ப்பத்திலே எல்லை கடந்து போய்விட்டது இரு பெண்களுள் ஒருத்தி பச்சைச் சேலையும், இன்னொருத்தி சிவப்புச் சேலையுங் கட்டியவளாய் வர, ஒரு சந்தியில நின்ற போக்கிலிகள் "இவள் முருகேசுவின் ஆள்; அவள் கதிரேசுவின ஆள்......" என்று சொல்லி, பெருநகை விளைத்தார்களாம்! யாழ்ப்பாணம் இவ்வளவு கெட்டுப்போதற்குக் காரணம் யாதோ அறிகிலேம் மதவெறியும் இரத்த வெறியுமே இவைகளுக்குக் காரணங்கள் போலும்.

* * *

முருகாம்மான் சிவராத்திரனத்தைத் தெருவிற் சந்தித்தவிடத்து "தம்பி, இந்தத் தேர்தல் விஷயத்தில் நீ யாருடைய பக்கமாக வேலைசெய்கின்றீர்" என்று கேட்டபோது, அவர் சிரித்துக்கொண்டு "அம்மான், நான் இன்னும் ஒரு பக்கத்திலும் சேரவில்லை; எந்தப்பக்கத்திற் பச்சையுண்டோ, அந்தப் பக்கத்தோடு நான் சேர்ந்து வேலைசெய்ய உத்தேசித்திருக்கிறேன்" என்று சிலேடையாகச் சொன்னாராம். "பணமென்றாற் பிணமும் வாய்திறக்கும்" என்பது பழமொழியல்லவா!

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.


# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்: யுவஹூ மாசிமீ ௧௨ வியாழக்கிழமை.


## திரு. துரைசுவாமிமீது "வீரகேசரி"யின் பாய்ச்சல்.

சென்ற வெள்ளிக்கிழமை (7-2-36 வெளிவந்த கொழும்புத் தினசரிப் பத்திரிகையாகிய "வீரகேசரி", ஊர்காவற்றுறைப் பகுதி அரசாங்கசபைப் பிரதிநிதியாகிய திரு. வை. துரைசுவாமி யவர்களின்மீது சில அபாரத்தைச் சுமத்தியிருக்கின்றது; அவ் வீரகேசரியின் கூற்றுப் பொருத்தமானதோ வென்பது ஆராய்தற்பாலதாகும். கொழும்புப் பத்திரிகையின் ஆசிரியர், திரு. துரைசுவாமியவர்கள் மீது சுமத்தும் அபவாதம் என்னையெனின், தேர்தலுக்கு முந்தி யாழ்ப்பாணச் சங்கத்தில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் "இலங்கையிற்சிறுபான்மையோரா யிருக்கும் தமிழர்களுக்கு அரசாங்கசபையில் தற்போது இருப்பதைவிட அதிகமான தானங்கள் கிடைக்கும்படி செய்வது, சிறுபான்மையோருக்குப் பாதகம் விளைக்கத் தக்க முறையில் பெரும்பான்மையோர் கொண்டு வரும் எந்த அரசியற் சீர்திருத்த யோசனைகளையும் எதிர்ப்பது" என்னும் இந்த நிபந்தனைகளை திரு. துரைசுவாமியவர்கள் ஒப்புக் கொண்டுள்ளாராம். ஆனல் 'போட்டி' யின்றித் தேர்தல் செய்யப்பட்டபின் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தமக்கு நடத்தப்பட்ட உபசாரணைக் கூட்டத்தில் திரு. துரைசுவாமியவர்கள் தாம் முந்தி ஒப்புக் கொண்டதற்கு நேர் விரோதமாகப் பின்வருமாறு கூறிவிட்டனரென்றே வீரகேசரி பழி சுமத்துகின்றது:-

"இந்நாட்டில் தமிழர்கள் நீண்டகாலமாக இருந்து வருகின்றார்கள்; அவர்கள் இலங்கையின் அறிவு வளர்ச்சிக்கும், மற்றும் விஷயங்களிலும் மகத்தான சேவைகள் செய்திருக்கிறார்கள். இனியும் அவர்கள் செய்யப்போவதும், செய்ய வேண்டியதும் எவ்வளவோ இருக்கின்றன. ஆகையால், வருங்காலத்திலும் நாம் வகுப்பு உணர்ச்சியின்றி இலங்கையிலுள்ள ஏனைய சமூகங்களுடன் ஒத்து(ழைத்து)ப் பொது நன்மையைநாடி உழைத்தல் அவசியமாம்."

என்று அவர் கூறிவிட்டனராம். இப்படிக் கூறி வாக்காளரை, திரு. துரைசுவாமியவர்கள் ஏமாற்றி விட்டாராம்; இதுவே வீரகேசரிப் பத்திராசிரியர் திரு துரைசுவாமி அவர்கள் மேற் கூறுங் குறைபாகும்.

ஊர்காவற்றுறைப் பிரதிநிதியாகவுள்ளவர் விக்ரோறியாக் கல்லூரியில் நடந்த கூட்டத்திற் பிந்திச் சொன்ன இந்த வார்த்தைகள், அவர் யாழ்ப்பாணச் சங்கத்தில் முந்தி ஒத்துக்கொண்ட நிபந்தனைகளுடன் எப்படி முரண்படுகின்றனவென்பது விளங்கத் தக்கதாயில்லையே! சிறுபான்மையினர் என்று சொல்லப்படும் தமிழர்களுடைய சுதந்திரங்கட்குப் பங்கம் வராமலும் அவர்கட்கு எவ்வகையான நீதியீனமும் பெரும்பான்மையான சாதியாரால் செய்யப்படாமலும் உழைக்க வேண்டுமானுற் சிங்களருடன்விரோதப்பட்டுத்தான் உழைக்க வேண்டுமென்ற நியதி வேண்டுமோ? வகுப்பவாதஞ்செய்து சிங்களவரோடு மாறுபட்டு உழைக்கப் போகின்றோம் என்று இங்கே சொல்லிக் கொண்டு இடையில் அரசாங்கசபையிற் புகுந்த முந்திய தமிழ்ப் பிரதிநிதிகளென்று இருந்த நால்வரும் அரசாங்கசபையிலே தமிழர்கட்கென்று விசேஷமாகச் செய்த நன்மைகள் தாம் என்னையோ! அவர்கள் இங்குத் தம்மவர்களையும் அங்குச் சிங்களர்களையும் விரோதித்தமைதானே எடுத்தபயன்!

இனி, வகுப்புவாத மென்பதுதான் என்னையோ? ஒரு வகுப்பினர் தங்கட்குரிய சுவாதீனங்கள் பிறப்புரிமைகள் முதலியவற்றைப் பெறும்படி வாதித்தலல்லவாவகுப்புவாதமாகும்? அதைவிட்டு மற்றை வகுப்பினருடன் பகைப்பதும் அரசினரையும் ஏனைய வகுப்பினரையும் பேதிப்பதும், பிற வகுப்பினர்க்கு இடர் செய்வதுமா வகுப்புவாதம்? தமிழ் வகுப்பினரின் ஈடேற்றத்தின் பொருட்டுச் சிங்களரோடும் ஏனைய வகுப்பினரோடும் ஒத்துழைத்து அநுகூலமடைவதும் மாறுபட்டுழைத்துப் பிரதிகூலமடைவதும் உழைக்கின்ற அந்தப் பிரதிநிதியிலே தங்கியிருக்கின்றனவேயல்லாமல் வேறு விஷயங்களிலும் நோக்கங்களிலும் பேச்சுக்களிலும் தங்கியிருக்கவில்லை; திரு. துரைசுவாமி யவர்களும் அவருடனும் அவருக்கு முந்தியும் பிரதிநிதித்துவம் வகித்த ஸேர் பொன் இராமநாதன் ஸேர் அம்பலவாணர் கனகசபை, ஸ்ரீமாந் அ. சபாபதி, ஸ்ரீமாந் ஆ. கனகரத்தினம் என்னுமிவர்களும் சிங்கள மக்களோடு ஒத்து உழைத்து அந்தப் பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கும் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கும் ஏனைய சிறுபான்மையினர்க்கும் பொதுவாக நன்மையைத் தேடி விட்டவர்களாவர்; தமிழ் மக்களுக்குப் பங்கம் வராமற் சிறப்பாகவும், இலங்கைமக்களுடைய நன்மைக்குக் குறைவு வராமற்பொதுவாகவும்,சிங்களர்முதலாம் ஏனைய வகுப்பு மக்களுடன் ஒத்துழைக்கும் வழியை ஸ்ரீ துரைசுவாமி யவர்கள் நன்கு அறிவர்.

மேலும் ஸ்ரீ துரைசுவாமியவர்களை எதிரிடையின்றி அரசாங்க சபைக்கு அனுப்பியிருக்கும் ஊர்காவற்றுறைப் பகுதி வாசிகளும் ஏனைய யாழ்ப்பாண மக்களும் இப் பிரதிநிதியை நன்கு அறிவர். சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் அவர்பேசிய பேச்சுகளினுல் இங்குள்ள மக்கள் அவர் மீது வெறுப்புக் கொள்ளுதலின்றி மேலும் மேலும் கூட்டங்கள் இடந்தோறுங் கூட்டி அவரை உபசரித்து வருகின்றார்கள். நமது வீரகேசரிப் பத்திராசிரியர் இவைகள் ஒன்றையும் சிறிதும் சிந்தியாது, திரு துரைசுவாமியவர்கள் அரசாங்கசபையிற் பிரவேசித்து என்ன செய்வர் என்பதை இருந்து பாராது, ஆத்திரப்பட்டு அவர் மேற் பழி சுமத்த முயன்றமை, இங்குள்ளார்எவர்க்கும்வெறுப்பைத் தருவதாகும். வீரகேசரி இந்த விஷயத்தில் இலக்குத் தவறிப் பாய்ந்து ஏமாந்து விட்டது போலும்!

## இவர்கள் கேட்பதும் நியாயமே.

இலங்கையிலே 3000 நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகள் வசிக்கின்றனர். குடிசனத் தொகை மிகவும் சிறியதாயினும் இவர்கள் இலங்கையின் பொருளாதார விருத்தியில் அதிகம் பங்கு கொண்டவர்கள் எனலாம். இலங்கையிலே ஐரோப்பியர்க்கு அடுத்த படியாக நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் பொருளாதார விஷயத்தில் செல்வாக்கு உடையவராயிருக்கின்றனர்.

இலங்கையிலே செட்டிப்பிள்ளைகள் 50000 ஏக்கர் நிலச் சொந்தக்காராயிருக்கின்றனர். அடகுதொழிலில் 40 லட்சம் ரூபா முதல் இங்கே விட்டிருக்கின்றனர். சில்லறைக் கடைகளில் 1 கோடி ரூபாவும், சடு முதலியனவற்றில் 2 கோடி ரூபாவும், காணி பூமிகளில் 60 லட்சம ரூபாவும், "நோட்டு" வட்டிக்குக் கொடுப்பதில் 2½ கோடி ரூபாவும், வங்கிச் சேமப்பணங்களாய் 50 லட்சம் ரூபாவும், நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் விட்டிருப்பதில் இருந்து, இலங்கை அரசியல் பொருளாதார விஷயங்களில், ஐரோப்பியர்க்கு எவ்வளவு பங்கு உண்டோ, அவ்வளவு பங்கு அவர்களுக்கும் அளித்தல் வேண்டும் என்பது புலப்படும்.

அரசாங்கசபையில் தமது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தமக்கு ஓர் பிரதிநிதி இருத்தல் வேண்டும் என நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் இப்போது சிலகாலமாகக் கிளர்ச்சி செய்து வருகின்றனர். நேற்றைக்கு முன்தினம் அவர்களின் நாதுக்கோஷ்டி ஒன்று எமது தேசாதிபதியைச் சந்தித்து தமது நிலைமையை பல நியாயங்களை ஆதாரமாகக்கொண்டு விளக்கியது. தேசாதிபதியும் அவர்கள் கோரிக்கையில் தாம அநுதாபப்படுவதாகக் கூறியிருக்கிறார்.

# கண்ணோட்டம்.

### இது சரியல்லவே.

அரசாங்க உத்தியோகத்தர்கள், தம் வாக்குச் சம்மதத்தை மாத்திரம் உபயோகிக்கலாமே யன்றிக் கட்சி பிரிந்து வாக்காளரைச் சேர்க்க வொண்ணுது என்பது கண்டிப்பான விதி; இப்படியிருப்பவும், நமது யாழ்ப்பாணம் கச்சேரியிலுள்ள பிரதானமான உத்தியோகத்தர் சிலர் வேலிபயிரை மேய்ந்தவாறு வாக்குச் சர்மதம் சேர்க்கும் முயற்சியில், இடைவாய்த் திரிகின்றனர் என்று எமக்குப் பல முறையீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவர்களைப் பெயர்சொல்லிப் பகிரங்கத்தில் இழுத்துவிட எமக்கு இப்போதைக்கு விருப்பமில்லையென்பதையும், இவர்கள் இன்னுஞ்சட்டவிரோதமானசெயல்களைச்செய்வாரானுல் அவர்களைப் பகிரங்கத்தில் வெளியிடத் தயங்கமாட்டோம் என்பதையும், அனைவர்க்கும், நமதுவடமாகாணத் தலைவர்க்குஞ் சமர்ப்பிக்க விரும்புகின்றேம். அரசாங்க உத்தியோகத்தர்கள் பொதுஜன ஊழியர்; அவர்கள் இத்தேர்தல் விஷயத்தில் நடுவு நிலைமை வகித்தல் வேண்டும். இது விஷயத்தைப்பற்றி நம் மாகாணத் தலைவர் சிந்திப்பாரா? சிந்தித்து ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பாரா?

### உண்மை என்ன?

இற்றலி — அபிஸீனிய யுத்தத்தில் இற்றைவரையில் வெற்றியடைந்தவர் யார், தோல்வியடைந்தார்யார் என்பதைப்பற்றிய உண்மைச் செய்திகளை அபிஸீனியாவுக்கு இப்பால் உள்ளவர்கள் அறியமுடியாமல் இருக்கிறது. இற்றலியச் செய்திகள் இற்றலிக்கே வெற்றியென்றும், அபிஸீனியச் செய்திகள் அபிஸீனியர்க்கே வெற்றியென்றும் பலபடக் கூறுகின்றன. வெற்றிதோல்விகள் எப்படியிருந்தபோதிலும், ஒன்று மாத்திரம் நிச்சயம். இற்றலி தனது லட்சியத்தை இன்னும் அடையவில்லை. அடையப்போவதும் இல்லை. இற்றலியரின் கொடிய விமானங்களும் குண்டுமாரிகளும், தாங்கிகளும், யந்திரத்துப்பாக்கிகளும் இற்றைவரை ஒன்றும் பிரயாதமாகச் சாதித்துவிடவில்லை என்பது, அவர்கள் இன்னும்அடிஸ் அபாபாவுக்கு பல மைல் தூரத்திலேயே நிற்பதில் இருந்து புலப்படும். இற்றலியர் தமது லட்சியத்தை இன்னும் சில தினங்களுக்குள் முடித்துவிடவேண்டும்; அனேமற்றல் மழைக்காலமே அவர்களுக்குப் பெரும் சத்துருவாய்வந்து அவர்களை நமனுலகுக்கழைத்துச் செல்லும்.

### கீழ்த்தரமான வேலைகள்.

இப்போதுள்ள அரசியற் திட்டத்தின்படி இலங்கையிற் சர்வஜன வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது இவ்வுரிமையைப் பெற்றிருப்பவர்களில் 100 க்கு 90 விகிதமானோர் அரசியற் பிரச்சினைகளின் அரிச் சுவடி தானும அறியார் என்பது மிகையாகாது. இவர்களுக்கு அரசியல் ஞானம் ஊட்டுவதற்குத் தேர்தற்காலந்தான் சிறந்தது. அரசியல்வாதிகள் ஜனத்தலைவர்கள் எனப்படுவோர் இச் சந்தர்ப்பத்தை பாமரஜனங்களுக்கு அரசியல் விஷயமாக அறிவூட்டுதற்குப் பயன்படுத்துதல்வேண்டும். ஆனல் இத்தேர்தற்காலத்தில் இப்பெருஞ் சேவையைச் செய்ய அவர்கள் தவறிவிட்டனர்; உள்ளதையும் கெடுத்த கொள்ளிக்கண்ணன்போல சும்மா கிடந்த பாமரஜனங்களுக்கிடையே பரஸ்பர துவேஷத்தையும் பகைவாஞ்சையையும் மத விருப்பத்தையும் உண்டாக்கியிருக்கிறார்கள் என்பது கண்கூடு. இது மாத்திரமா வடமாகாணம் முழுவதும் இப்போது "எளிய" கீழ்த்தரமான பாஷை பெய்திதுள்ள துண்டுப்பத்திரங்கள் பச்சை நிறத்திலும் சிவப்பு நிறத்திலும் மலிந்து வருகின்றன. இத்தகைய துண்டுப் பத்திரங்களினுல் வீண் பணச் செலவும அவற்றிற் காணப்படும் எளிய வார்த்தைகளினுல் மனக் குரோதமும் ஏற்படுமேயன்றி நன்மையெதுவும் கிடைக்கமாட்டாதென்பதை அபேட்சகர்களும் அவர்களின் ஏசண்டு மாரும் கூலிக்குமாரடிக்கும் கோடரிக்காம்புகளும் இற்றைவரை உணராததுப் ஏனோ?

### 150 கத்தோலிக்கர்சிறை.

இப்போது ஜெர்மனியில் அதிகாரம் வகித்திருக்கும் நாஸிக்கட்சியினர்க்குக் கத்தோலிக்கர் வேம்பாயிருக்கின்றனர் இப்போது கத்தோலிக்க குருமார் உட்பட 150 கத்தோலிக்க பிரமுகர் சிறையாயிருக்கின்றனர்.

### மக்டோனல்டிற்கு வெற்றி.

பிரிட்டிஷ் சுயேச்சை நாடுகளின் மந்திரியாயுள்ள மிஸ்ரர் மல்க்கோம் மக்டோனல்டு (பழைய மந்திரியின் மகன்) சென்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் தமது தந்தையுடன் தோல்வியுற்றுர், எனினும் இன்னேர் உபதேர்தலில நின்று இப்போது வெற்றி பெற்றிருக்கிறார். அப்படியே அவர் தந்தையும் ஓர் உபதேர்தலினுல் வெற்றி பெற்றிருக்கிறார்.

### மிஸ்ரர்மொலமூரே விடுதலை

மிஸ்ரர் A. F. மொலமூரே (அரசாங்கசபைப் பழைய தலைவர்) சிறைச்சாலையில் நோய்வாய்ப்பட்டிருந்தபடியால் அவரை விடுதலை செய்யுமாறு தேசாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். அதன்படி மிஸ்ரர் மொலமூரே இப்போது விடுதலை பெற்றுச்சிகிச்சை செய்விக்கின்றார்.

### ஹடயோகி பிணமானுர்

லாகூரில் ஒரு ஹடயோகி சினிமா கொட்டகையொன்றில் தமிடம் கொடுக்கும் எதனையும் சாப்பிடும் வித்தையைக் காட்டிக்கொண்டிருக்கையில் காலமானுர் காட்டு மிருகங்களைப் பழக்கியவர் அம் மிருகம் ஒன்றினுல் சாவதைப் போல அந்த ஹடயோகி தமது முடிவை எய்தினர்.

அவர் கொடிய விஷப் பூச்சிகளையும் பாம்புகளையும் மென்று தின்றதோடு ஒரு கிண்ணம் விஷத்தையும் பருகினர். உடனே அவர் மூர்ச்சையாகி தரையில் வீழ்ந்தார். மறுமடியும் அவருக்குப் பிரக்ஞை வரவில்லை. அத்துடன் அவரது பிரேதத்தை வைத்திய சோதனைக்கு எடுத்துக்கொண்டுபோயினர்.

### வரணி சைவ மகாநாடு.

வரணி சைவ வித்தியா விருத்திச் சங்க வித்தியாசாலை மண்டபத்தில் சைவ மகாநாடு சென்ற ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. நியாயவாதி ஸ்ரீ மா. ச. இளையதம்பி அவர்கள் அக்கிராசனம் வகித்தார். பருத்தித்துறை பண்டிதர் கனகசபாபதி, சாவகச்சேரி வித்துவான் பொன்னம்பலபிள்ளை என்பவர்கள் சொற்பொழிவுகள் செய்தனர்.

## மலேரியாத் தடை மருந்து.

### தென்னங்கள்ளிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து.

### அதிகாரிகளால் ஏற்றுமதிக்கு முட்டுக்கட்டை.

தென்னங் கள்ளைக்கொண்டு தயாரிக்கப்படும் மருந்துவகைகள் லண்டன் இலங்கை விடுதிக்கு அனுப்பப்படத் தயாராகவிருக்கின்றன. மொத்தம் 12 வகைகள் இருக்கின்றன. 390 மாதிரிகள்போத்தல்களில் அடைக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் லண்டனில் இலங்கைவிடுதியில் வைக்கப்படும். மலேரியாவுக்கு இவைகள் நல்ல மருந்தெனச்சொல்லப்படுகிறது.

தென்னிந்தியா, பர்மா, மலாய்நாடு முதலிய இடங்களிலிருந்து மேற்படி மருந்துகளுக்குக் கேள்வி வந்த போதிலும இலங்கை மதுப்பகுதியார் அனுமதியளிக்கவில்லை ஆகவே மருந்து உற்பத்தி நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறது.

மருந்துகளைப்பற்றிய சட்டம் பெப்ரவரி மாத முடிவுக்குள் தயாராகிவிடுமென்றும், பின் அது சட்ட நிபுணரால் கவனிக்கப்பட்டு உள்நாட்டு மந்திரி தேசாதிபதி ஆகியோரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படுமென்றும் மதுப்பகுதித் தலைவர் கூறுகிறார்.

மலேரியாத் தடை மருந்துக்கு ரூ 1000 அளிப்பதாகத் திருவாங்கூர் வைத்தியச் சங்கம் பேசியிருப்பதால், மேற்படி மருந்து வகைகளைத் திருவாங்கூருக்கு அனுப்புவதென்று உற்பத்தியாளர் தீர்மானித்திருக்கின்றனர் மலேரியாத் தடைமருந்துக்கு யானம் ஏற்பட்டு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து "கேள்விகள்" வந்திருந்த போதிலும் அரசாங்க அனுமதி அளிக்கப்படவில்லையாதலால் அவைகள் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

## 69 பேர்கள் ஹிந்துக்களானுர்கள்

சென்றவாரம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செங்கோடு தாலுக்கா எடப்பா கிராமத்தில் பல ஹரிசனங்கள் கிறிஸ்து மதத்தை விட்டு இந்து மதத்தில் சேர்ந்து கொண்டார்கள். சேலம் வக்கீல் ஸ்ரீ கே. வி. சுப்பராவ் பி. ஏ., பி. எல் ஹரிசன சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ எஸ். பி. ஆதிகேசவலு செட்டியாருடன், சுத்தியை நடத்தினர். ஹரிஜனங்களின் குலகுரு தேசாயி செட்டியாருடனும் யூனியன் போர்டு தலைவர் ஸ்ரீ சின்னுணடி பத்தருடனும் மேளவாத்தியத்துடன் ஊர்வலம் வந்து, அழகாக அலங்கரிக்கப்பெற்ற காவடியில், சடங்குகள், ஹோமம வளர்த்தி நடததப்பட்டன.

## சுமத்ரா சஞ்சீவி.

### உணர்வற்ற உடலுக்கு உயிர்தரும்

சுமத்ரா தீவுக்கருகில் ஒருவித மான அதிசயச்செடி இருக்கிறது. அதில் காய்கள் கொத்துக்கொத்தாய்க் காய்க்கின்றனவாம். அக்காய்களில் நிறைய வித்துகள் இருக்கின்றனவாம் அவற்றைப் பொடிசெய்து வைத்துக்கொண்டு உட்கொண்டால், நல்ல பலமும் ஆண்மையும் உண்டாகின்றனவாம். உடலுக்கு உற்சாகமளித்து, மனக் கவலைகளையும் அசதி, அயர்வு, மயக்கம், வலி முதலியவைகளையும் அப்பொடி போக்கி விடுகின்றதாம். மேலும் உஷ்ணம் அதிகமாயிருந்தால்குளிர்ச்சியையும், குளிர்ச்சி அதிகமாயிருந்தால் சூட்டையும் இப்பொடி உண்டுபண்ணுகிறதாம். இப்பொடி உணர்வற்ற உடலை, உணர்ச்சியும் ஆரோக்கியமும் பெறும்படி செய்கிறது. இதனை ஜேம்ஸ் லீ என்பவர் கண்டுபிடித்திருக்கிறார்.


வியாபாரத்திற் கழகு
இந்துசாதனத்தில்
விளம்பரஞ் செய்தல்.

# அஞ்சவேண்டாம்!

## எதிரிக்கு நீதியரசரின் புத்திமதி.

## அநுதாபமில்லையென்றுஎண்ண வேண்டாம்:

## கட்டுவன் கொலையில் 20-வருஷம்.

(நமது நிருபர்)

தெல்லிப் பழையைச் சேர்ந்த கட்டுவன் என்னும் கிராமத்தில் வசிக்கும் காகன் கதிரன் என்பவன் தனது மனைவியாகிய செல்லி என்பவளைக் கத்தியால்வெட்டிக் கொலை செய்தான் என்ற வழக்கு விசாரணை சென்ற புதன்கிழமை முடிந்து எதிரி நீதியரசரால் 20 வருஷக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான்.

வழக்கு ஆரம்பமாய், எதிரி கூட்டில் ஏற்றப்பட்டதும், அவன் குற்றவாளியோ அன்றோ என்று நீதியசரால் கேட்கப்பட்டபோது அவன் "ஆண்டவனே, என்னை இனியும் கேட்பதிற் பிரயோசனம் இல்லை: நான் கொலை செய்தேன்தான் எனது உயிரும் அவளுடைய உயிரும் ஒன்று" என்று கூறினன். அப்போது நீதியரசர் திரு. M. T அக்பார் அவர்கள் அவனை நோக்கி,

"அப்பா, நாங்கள் இங்கே ஓர் பொறுப்புவாய்ந்ததும் மகத்தானதுமான கடமையைச் செய்ய இருக்கிறேம். நாம் உன்மீது அநுதாபமற்றவர் என்று விளங்கிக்கொள்ளாதே! இல்லை; உன்மீது எமக்கு அநுதாபம் உண்டு: உனக்கு உதவி செய்தற்காகவே நாங்கள் வந்திருக்கிறேம்: இந்த வழக்கு விசாரணையில் உனக்குச் சார்பானவற்றையும் தேடி உனக்கு உதவி செய்வோம்: நீ நெடுநாளைக்கு இருப்பாயானல், நீ தீமை செய்திருந்தால், அதன் பொருட்டுப் பச்சாத்தாபப்படுவாய்: எனவே, மனம் சோர்வடையவேண்டாம்; உஷாராய் நில்; நிகழ்ந்த சம்பவங்களை எமக்குக் கூறு." என்றார்.

கொலைசெய்யப்பட்ட செல்வி தன் காணியை விற்றுத் தன் மைத்துனனுக்குப் பணம் உதவிடமையே கணவன் பனைவியரின் பிணக்கிற்குக் காரணமென்றும், அப்பிணக்கின் பயனுகவே கணவன் தன்பனைவியைக் கொலை செய்தான் என்றும் விசாரணையில் தெரியவந்தது.

விசாரணையின் பின், ஜூரிமார் கைப்பிழைபாட்டுக் குற்றத்தின் பொருட்டு எதிரி குற்றவாளியே என அபிப்பிராயம் கூறினர்; அப்போது நீதியரசர் எதிரியை விழித்து, "இது வேண்டுமென்று செய்த கொலையோ கைப்பிழைபாட்டுக் குற்றமோ என்ற சந்தேகம் தோன்றியமையால், ஜூரிமார் சந்தேகத்தின் பயனை உனக்களித்து, கைப்பிழைபாட்டுக் குற்றவாளியென்று அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள்; அவர்களின் அபிப்பிராயத்தை நான் அங்கீகரிக்கிறேன்; ஆனல் இது ஓர் கொடிய குரூரமான கொலை என்றே விசாரணையில் இருந்து எனக்குப் புலப்பட்டது. எனவே, உனக்கு நான் 20 வருஷத்திற்குக் குறைந்த தண்டனை விதிக்கமுடியாது" என்று கூறி அவ்வாறே தண்டனை விதித்தார்.

---

# வியாபாரமா?

# மனச்சாட்சியா?

## அம்மி தாழுமா? குளவி மிதக்குமா?

## அபேட்சகர்க்கு ஆதரவுதேடும் ஆரவாரம்.

## கூலிக்குமாரடிப்போரின் கும்மாளம்.

இந்துசாதனப் பத்திராசிரியர்

அவர்கட்கு,

ஐயா,

இந்த வண் வடமேற்கில் தேர்தற்றாகர்மாரின் அமளியைப்பற்றிச் சிறிது கூற இடந்தருமாறு தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்:

இந்தப்பகுதியில் எண்ணெய்வாணிவர், பொன்வினைஞர், தச்சுவேலை செய்வோர் முதலாம் சகோதரர் ஒவ்வோர் பகுதியாய் இருக்கின்றனர். ஒவ்வோர் பகுதியினரும் தேர்தலில் வாக்குச் சொல்லும் விஷயத்தில் இனப் பிரியமுட்டார் என்ற நம்பிக்கை இங்கே தேர்தற் றாகர்மார் உள்ளத்தில் இருக்கிறது. எனவே, அவர்களின் வாக்குச் சம்மதங்களை விலைகொடுத்து வாங்குதற்கு இருகட்சியினரும் தனித்தனி அவாவுற்று அமளிசெய்கின்றனர்,எல்லாத்திற் கேட்பதுபோல இத்தாகர்மார் இவ்வாக்குச்சம்மதங்களுக்குப் பேரங்கூறி வருகின்றனர்.

அந்தோ, ஜனநாயக ஆட்சிக் கொள்கையைப்பற்றி விளக்கும் சகலப்பமான இத்தேர்தற்காலத்தை இவ்வளவு கேவலமாக்கி, வாக்காளரின் ஒழுக்கத்தைப் பங்கப்படுத்த முனைந்து நிற்கும் இத்தேர்தற்றாகர்மாரின் அமளியைத் தடுத்தல் முடியாதா என்று, ஐயா, தங்களைக் கேட்கிறேன்.

இங்ஙனம்
தங்கள் ஊழியன்,
வண்-வடமேற்கு வக்காளன்

வண்-வடமேற்கு,
9-2-36.

---

### கால நிலை.

சென்ற வாரம் பெய்த மழையினல் எவ்வகைப் பயிருக்கும் நன்மையுண்டெனக் கமக்காரர் தோட்டக்காரர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். முந்தி விதைக்கப்பட்ட நெல் வெட்டப்படுகின்றது. பிந்திய விதைப்பில் அரிவி வைபிடுதற்கு இந்த மாசி மாதம் கடும் தேதி வரையிற் செல்லுமென்று சொல்லப்படுகிறது.

---

# இந்திய அரசியற் குறிப்புக்கள்

### பதவி ஏற்கும் பிரச்சினை.

ஆந்திர மாகாணக் காங்கிரஸ்சபை, வரப்போகும் தேர்தலில் காங்கிரஸ்வாதிகள் கலந்து, சட்டசபை ஸ்தானங்களைக் கைப்பற்றுவதுடன் பதவிப்பதவிகளையும் ஏற்றல் வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறது.

### இராசாங்கசபைத் தேர்தல்.

இந்திய மத்திய அரசியலுடன் சம்பந்தப்பட்ட இராஜாங்க சபை பெயரும் பெரிய சபையாகான தேர்தல் இன்னும் சில நாட்களில் நடைபெறும்; அத்தேர்தலிலும் காங்கிரஸ்வாதிகள் ஸ்தானங்களைக் கைப்பற்ற வேண்டும் என காங்கிரஸ் பஞ்சாயத்துச்சபை தீர்மானித்திருக்கிறது.

### ஒட்டாவா ஒப்பந்தம்

ஒட்டவா ஒப்பந்தம் சம்பந்தமான விவாதம் சென்ற திங்கட்கிழமை சட்டசபையில் விவாதத்திற்கு வருமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் இப்போது அவ்விவாதம் மார்ச்சு மாதத்திற்கெனத் தவணையிடப் பட்டிருக்கிறது.

### ஸ்ரீஜுத் N. C. பர்தலோய்.

இந்தியச் சட்டசபையில் காங்கிரஸ் அங்கத்தவரான ஸ்ரீஜுத் N. C. பர்தலோய் என்பவர் இப்போது மிகுந்த சுகவீனமாய் இருக்கிறார்; அவரின் நிலைமை ஆபத்தானது எனக் கருதப்படுகிறது.

### மாகாணசுயாட்சி.

சிந்து, ஒரிசா தனி மாகாண அமைப்பு சம்பந்தமான இந்தியா மந்திரி காரியாலய நகல் உத்தரவுகளிரண்டும் சென்ற 8 ம் தேதி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டன. உத்தரவுகளை அங்கிகரிக்கும்படி கேட்டுக்கொண்டு இந்தியா உதவிமந்திரி மிஸ்டர் ஆர். ஏ. பட்லர் பேசியதாவது:-

"அரசியற் சட்டத்தை அமுலுக்குக்கொண்டுவருவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் சரியாய்நடந்து வருவதாக ஜெட்லாந்து பிரபு நம்புகிறார். நியோ மேயர் அறிக்கையிலிருந்து பொருளாதாரத் தடைகளொன்றும் இல்லையெனத் தெரிந்து விட்டால் 1937 ம் வருஷ ஆரம்பத்தில் மாகாண சுயாட்சியை ஏற்படுத்து வதற்கு அநுகுணமான இந்திய அரசியல் சட்டத்தின் மூன்றாவது பாகத்தை அமுலுக்குக் கொண்டு வருவது பற்றி ஆலோசனை செய்யப் பாராளுமன்றத்தைக் கேட்டுக் கொள்ளுவோம்"

### காங்கிரஸும் ஜவஹரும்

"மான்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை பின்வருமாறு வரைகிறது:-

"காங்கிரஸ்வாதிகளிடையே காந்திஜீயைத் தவிர்த்து ஜவஹர்லாலைப் போல் அவ்வளவு மதிப்புப் பெற்றவர்கள் யாரும் கிடையாது. இவர் அபேத வாதியேயாயினும் காங்கிரஸ் அபேதவர்தக் கட்சியில் சேர்ந்துவிடவில்லை. அக்கட்சியின் நோக்கங்களை அவர் ஒப்புக்கொள்கிறார். புது அரசியலில் காங்கிரஸ்காரர் பதவி ஏற்கக் கூடாதென்று அவரும் அபேதவாதிகளைப்போலவே அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்.

காங்கிரசுக்கு வரும் பிரதிநிதிகளுள் ஆறிலொருபங்குக் குறைவாகவே அபேதவாதிகளிருப்பர். ஆகவே காங்கிரஸ்காரர் பதவி ஏற்பதைப் பெரும்பான்மையோர் ஆதரிப்பது நிச்சயம். தமக்குப் பிரியமில்லாத ஒரு விஷயத்தைக் காங்கிரஸ் தீர்மானித்த போதிலும் அவர் ஆதரித்துப் பேசுவது அவருக்குத் திருப்தியைக் கொடாது. தம் தலைமையில் அபேதவாதக் கொள்கைகள் பரவுமென்ற ஓரே விஷயந்தான் அவருக்குத் திருப்தியைத் தரவேண்டும்.'

---

# இற்றலியரின் அக்கிரமம்.

## செஞ்சிலுவை ஆஸ்பத்திரிமீது குண்டுமாரி. அபிசீனியர்க்குப் பூரணமான வெற்றி.

## 30000 இற்றலியர் ஏற்றுமதி.

### போர் நிலைமை.

#### தெற்குப்போர் முனை.

வாபசஸ்ட்ரோ மார்க்கமாக மார்சல் கிரேஸியானியின் சைந்நியங்கள் முன்னேறுகின்றனவென்று மார்ஷல் படாக்ளியோவின் அறிக்கையொன்று கூறுகிறது டோலாவுக்குப் பத்துமைல்களுக்கப்பால் உள்ள வாமாஷிஷி நதிஎன்னுமிடத்தில் ஒரு அபிஸீனியப்படையை புறவேயிலிருந்துவந்த வொருசைந்நியம் தவம்ச மாக்கியது. விவாபார்மா நதிக்கரையில் மற்றொரு அபிஸீனிடப்படையுடன் சண்டைநடந்தது. அபிஸீனியா பலர் இறந்தனர் பலர் சிறை செய்யப்பட்டார்கள் டரிப் போர்முனையில் குறப்பிடத்தகுந்த சம்பவங்களொன்றுமில்லை.

#### நிர்ப்பந்த முறைகள்.

எண்ணெய்க்குப் பதில் பொருள்கள் உபசபை யாதாஸ்தை சென்ற வாரம் விவாதித்தது. எண்ணெய்க்குப் பதிலாக உபயோகிக்கக் கூடிய பொருள்கள் எவையென்றும் அவை எவ்வளவு தூரம் இத்தாலிக்குக் கிடைக்குமென்றும் யாதாஸ்தில் கூறப்பட்டிருக்கிறது.

#### இற்றலியரிடம் சரண்.

அபிஸீனியப் பெண்களும் குழந்தைகளும் ஆடவரும் அடங்கிய 650 பேர் சென்றவாரம் இத்தாலியரிடம் சரண் புகுந்தார்கள். ஆயிரக்கணக்கான கால் நடைகளையும் அவர்கள் கொண்டு வந்தனர் என்று இற்றலியச் செய்தி ஒன்று கூறுகிறது

#### போர் முனை.

வடக்குப் போர்முனையிலிருந்து திரும்பி வந்திருக்கும் ஒருவர் கெம்பிடனில் ஒருநாள் நடைபெற்ற யுத்தத்தைப்பற்றிக் குறிப்பிட்டதாவது:—

ஓரிரவு முழுவதும் பயங்கரமாகக் கழிந்தது. எதியோப்பியப் படைகள் ஒரு கேந்திர ஸ்தானத்தைத் தெம்பியன் சண்டையில் பிடித்துவிட்டன. எந்த நிமிஷமும் மாகாலி நகரத்தை அவர்கள் திரும்பப் பிடித்துக் கொள்ளக் கூடும் இரவில் இத்தாலியரை அபிஸீனியர் திடீரென்று தாக்குகிறார்கள். இத்தாலியரால் இதை எதிர்க்க முடியவில்லை. தல முழுவதும் அபிஸீனிய சேனையைப் பார்ப்பதே அரிதாகவிருக்கின்றது. சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு தம்மையே அவர்கள் தோன்றுகிறார்கள். வடக்கு மலைகளிலிருந்து இத்தாலியரை அபிசீனியர் வெருட்டியடித்து விடுவார்கள்.

### வியபனே பிரபு.

முஸோலினியின் மாப்பிள்ளையான வியபனே பிரபு கிழக்காப்பிரிக்காவில் விமானப் படைப்பிரிவொன்றின் தலைமையை ஏற்றுக்கொள்ளுவதற்காக பாஸிஸ்டு கட்சி காரியதரிசியான சிஞேர் ஸ்டாராஸியுடன் புறப்பட்டார்.

### இத்தாலியர் அறிக்கை.

தெற்குப்போர்முனையில் வாபிஜுஸ்ட்ரோபள்ளத்தாக்கு மார்க்கத்தில் அபிஸீனியர் ஓடும்படியானமுறையில் இத்தாலியர் முன்னேறுவதே முக்கியமானவிஷயமென்று இத்தாலிசேனதிபதி படாக்ளியோ தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### அபிசீனியர்க்குப் பெரும் வெற்றி

சென்ற 11-ம் தேதி ஒகடன் போர் முனையில் குருற்றி எனனும் இடத்திற் கொடிய போர் ஒன்று நிகழ்ந்தது. அப்போரில் அபிஸீனியர் பூரணவெற்றியடைந்தனர் என்றும் பன்னூற்றுக்கணக்கான இற்றலியர் மாண்டனர் என்றும் ஓர் செய்தி கூறுகிறது. இப்போரில் நஸிபு சேனதிபதியாய் இருந்தார். சேனை அணிவகுப்பைத் திட்டம் செய்தவர் துருக்கியச் சேனதிபதி வாகிப் பாஷா என்பவரே.

### இற்றலியின் அக்கிரமம்

தெஸி என்னும் இடத்தில் உள்ள ஒல்லாந்தரின் செஞ்சிலுவை ஆஸ்பத்திரியைக் குண்டுமாரியால்தகர்க்க இற்றலிய விமானிகள் பன்முறை முயற்சித்தன என்று தெரிகிறது.

### அபிசீனியர் பின்வாங்கினர்.

மாகேலேத்திரும்பவும் கைப்பற்றச் சென்ற 10-ம் தேதி ரூஸ்சேயத்தின் கீழ் உள்ள அபிசீனியப்படைகள் சில முயற்சித்தனர் ஆனல் அவை இற்றலிய யந்திரத் துப்பாக்கிகள் முன நிர்வகிக்க முடியாது பின்வாங்கின என்று ஓர் செய்தி கூறுகிறது.

### 30000 இற்றலிய வீரர்.

ஜனவரி மாதம் 25-ம் தேதி தொடக்கம் பிப்ரவரி 3-ம் தேதி வரையில் 30000 இற்றலிய வீரர் ஆபிரிக்காவுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். 2300 தொன் ஆயுதளபாடங்களும் ஏற்றமதி செய்யப்பட்டிருக்கின்றன. 4000 தொன் எண்ணெய் குறித்த காலவெல்லையில் அனுப்பப்பட்டிருக்கிறது.

---



## சினிமாக் குறிப்புக்கள்

(A. K. S.)

**நவீன சதாரம்.**

சென்ற சனிக்கிழமை தொடக்கமாக நவீன சதாரம் என்னும் படக்காட்சி யாழ்ப்பாணம் நீகல்மண்டபத்திற் காட்டப்பட்டு வருகிறது இப்படத்தில் S. D சுப்புலக்ஷ்மி (சதாரம்) R. சங்கரலிங்கம் (சுலோதச்சகன்) S. S, மணிபாகவதர் (மயோன்) "ஜாலி" கிட்டு ஐயர் (அழகு) இந்துபாலா (அழகின் தாயார்) முதலியோர் நடிக்கின்றனர் சாதாரணமாக நமது நாடக மேடைகளில், தென்இந்திய நடிகர்களாலும், அவர்களைப் பின் பற்றும் நம் ஊரவர்களாலும் நடிக்கப்படும் ஆபாசம் நிறைந்த "சதாரம்" நாடகத்திற்கும் இப்படக்காட்சிக்கும் அநேகவித்தியாசங்கள் இருப்பது ஈண்டுப் பிரதானமாகக் குறிப்பிடத் தக்கதாம் இப் படக்காட்சியை நம் நடிகர்கள் பார்க்கவேண்டும்: கற்பிற் சிறந்த சதாரத்தின் சரிதத்தைஉள்ள உள்ளவாறே நடித்துக் காட்டுதல்வேண்டும். நிற்க இப்படத்தில் S. D. சுப்புலக்ஷ்மி தமது முந்தியகுறைகளை— உதாரணமாக மிகைபட நடித்தல். செயற்கைச்சோகம் என்பனவற்றை —தவிர்த்துக் குற்றமின்றி நடித்திருக்கிறார். பவளக்கொடி, நவீன "சாரங்கதரா" என்னும்படங்களிலும் பார்க்க இதில் சுப்புலக்ஷ்மிக்கு வேடப்பொருத்தம் நன்றாக அமைந்திருக்கிறது. இப் படக்காட்சியில். நடிப்பு விஷயமாகச் சொல்லுமிடத்து S. S·மணிபாகவதர்க்கும் "ஜாலி" கிட்டுஐயர்க்குமே முதன்மை ஸ்தானங்கள் அளித்தல்வேண்டும்: பாகவதரின் வேஷம் சிங்காரநடிப்பு வசனம், இனியசங்கீதம். என்பன எவரையும் வசீகரிக்க வதுவாயிருக்கிறது. அழகாக நடிக்கும் "ஜாலி" கிட்டு ஐயரின் இப்படக்காட்சியிலேயே நமதுநடிப்பு விஷயமாக உச்ச நிலையை அடைந்திருக்கிறார் அன்னவர் இத்தகைய திறமையுடன் நடிப்பரென நாம் காத்திருக்கவில்லை; இப்படியே அவர்முன்னேறுவாராஞல் C. S சாமண்ணா M. R சுப்பிரமணிய முதலி, இராமச்சந்திர ஐயர், என்னும் பிரபல நடிகர்கள இப்போது வகித்திருக்கும உன்னத பதவியை வெகு சீக்கிரத்தில் அடைவார் எனத்திடமாய்க் காத்திருக்கலாகும். அழகின் தாயாராக நடிக்கும் இந்துபாலா என்னும் வங்கநாட்டுவித்துவாம்சைக்குத் தமிழ் அதிகம் தெரியாவிட்டாலும் தம் செய்கை மூலம் தம் நடிப்பைத் திறம்படக் காட்டியிருக்கிறார். அவரது நடிப்பிலும் பார்க்க, சங்கீதமே இப்படத்திற்கு ஓர் விசேஷம் கொடுத்திருக்கிறது. இந்துபாலா ன் வடநாட்டுச் சங்கீதத்திற்கு ஓர் விசேஷ சக்தியுண்டு. தொகுத்துக் கூறுங்கால் "நவீன சதாரம" படம் பிடித்தமை, தொனி கிரகித்தமை என்பவற்றில் குற்றம் இன்றி இருக்கிறது.

**ஸ்ரீமதி இராஜலக்ஷ்மி**

தமிழ்ப்படக்காட்சியுலகில் ஸ்ரீமதி T. P. இராஜலக்ஷ்மி ஒப்புயர்வற்ற ஓர் உன்னத பதவியில் இருக்கிறார் என்பதை எவரும் மறக்கமுடியாது! இவரின் நடிபபுத்திறமையை மெச்சாதவர் இலர் எனலாம். அன்னவரைத் தம்முடன் சேர்த்து நடிப்பதற்குப் பல வட இந்திய நடிகர்கள் அவாவுகின்றனர். ஹிந்திப் பேசுபடக்காட்சிக் கம்பனியார் பலர், ஸ்ரீமதி இராஜலக்ஷ்மியைத் தம் நடிகையாக வரவேண்டுமென்று கேட்டிருக்கின்றனர். ஸ்ரீமதி இராஜலக்ஷ்மியும் அவர்களது கேள்விக்குடன்பட்டு, இப்போது ஹிந்தி பயிலுகின்றார்.

# பாலர்பகுதி.

**எனது அன்புமிக்க மருமக்களே!**

சென்ற வியாழக்கிழமை இந்து சாதனப் பத்திரிகை வெளிவரவில்லை; ஆனபடியால், நான் உங்களுடன் சம்பாஷிக்க முடியவில்லை; தங்களுக்குரிய பாலர்பகுதி வெளிவரவில்லையே என, எனது மருமக்களும் எனக்குக் கடிதமெழுதவில்லை. இது எனக்கு உண்மையில் வருத்தமே; மருமக்களே, எனக்குக் கடிதம் எழுத மறக்கவேண்டாம்; உங்கள் சுகத்தை அறிவிக்கத் தவறவேண்டாம்.

நிற்க, சென்றமுறை உங்களுக்கு நான் அரசாங்கசபையைப்பற்றிச் சொல்லித்தந்தேன் அல்லவா? அத்துடன் நமது நண்பர் ஸ்ரீமான் மா. பீதாம்பரம் அவர்கள் ஸ்ரீ இராமக்கிருஷ்ணபரமஹம்சரைப்பற்றி உங்களுக்கு என்று எழுதிய கட்டுரையையும் வெளியிட்டேன்; அவற்றையெல்லாம் நீங்கள் நன்றாகப் படித்திருப்பீர்கள் என்றே நம்புகிறேன் நல்லது, இன்றைக்கு உங்களுக்கு எமது அயல்நாடாகிய இந்தியாவிலேயுள்ள ஓர் பெரிய சங்கத்தைப் பற்றிச் சொல்லித் தருகிறேன்: கேளுங்கள்.

### இந்தியக் காங்கிரஸ.



இந்தியமாதா.

எனது அருமை மருமக்களே, எமது தாய்நாடான இந்தியாவும், எமது இலங்கையைப்போலவே வெள்ளைக்காரர்க்குக்கீழ் இருக்கிறது: 6000 மைல்களுக்கப்பால் இருக்கும் வெள்ளைக்காரரே இந்தியாவை அரசுபுரிகின்றனர்: மருமக்களே, உங்கள் வீடு இருக்கிறது என்று வைத்துக்கொள் வோம்: அந்த வீட்டுக்கு நீங்களே சொந்தக்காரர்; அந்த வீட்டில் இன்னொருவர் வந்து வசித்து ஆட்சி புரிந்தால், நீங்கள் என்ன செய்வீர்கள; உங்கள் வீட்டில் வசிக்கும் அவர் மிக்க பலசாலியாய் இருந்தாலும், அவரைக் விலக்கி அதில் நீங்கள் ஆட்சி செய்ய விரும்புவீர்கள்? இல்லையா? இந்தியாவில் வசிப்பவர்களும், இப்படியே தங்களுடைய சொந்த நாட்டை வெள்ளைக்காரரிடம் இருந்து பெறுதல் வேண்டுமென்ற அவாக் கொண்டனர்: ஆனால் கேட்டவுடன், வெள்ளைக்காரர் தாம் இதுகாலும் ஆண்டு அநுபவித்த நாட்டை இந்தியரிடம் கொடுத்துவிடுவார்களா? ஒருபோதும் இல்லை; இந்தியாவை ஆளும் வெள்ளைக்காரரிடம் பெரிய பட்டாளம் இருக்கிறது; பட்டாளம் என்றால் சேனை;

"இது எங்களுடைய நாடு; எங்கள் நாட்டை எங்களிடமே தாருங்கள்" என்று சுமமா கேட்டால் வெள்ளைக்காரர் தரமாட்டார்கள் என்பதை இந்தியர்கள் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளின் முன்னர் உணர்ந்தனர்: தங்களுக்குளளே. ஒற்றுமை யிருந்தால, 35 கோடி இந்திய மக்களும் சுயராச்சியம் கேட்டால், ஆங்கிலேயரால் மறுக்க முடியாது என்பதை ஐம்பது ஆண்டு காலத்திற்கு முன்னர் இந்தியர் கண்டுகொண்டனர்:

"வெள்ளைகாரர் இனியும் எங்களை அடிமைகளாய் வைத்திருக்க வொண்ணாது: எம நாட்டை ஆளும் அதிகாரம எங்களிடமே யிருத்தல் வேண்டும்; அந்த அதிகாரத்தைப் பெறவேண்டும்" என்று எண்ணி, அதனைப் பெறுதற்காக, கல்வியில் மேம்பட்ட இந்தியத் தலைவர்கள் சிலர் சேர்ந்து. இற்றைக்கு




50 ஆண்டுகளுக்கு முன்னர் ஓர் சபையை தாபித்தனர்; மருமக்களே அச்சபையின் பெயர் தான் "காங்கிரஸ்"மகாசபை. காங்கிரஸ் என்பது ஓர் இங்கிலிஷ் சொல். காங்கிரஸ் என்றால், ஓர் காரியத்தை முடிப்பதற்காகப் பலர் சேர்ந்து தாபிக்கும் ஓர் சபை என்று தமிழிற் சொல்லலாம். இந்தியாவுக்குச் சுயராச்சியம் பெற்றுக் கொடுப்பதையே இந்த "காங்கிரஸ்" மகாசபை நோக்கமாகக்கொண்டுள்ளது.

மருமக்களே இந்தியர் 35கோடி பேர்; இவர்களையாளும் ஆங்கிலேரா, இவர்களிலும் பார்க்க மிகக் குறைந்த தொகையினர் ஆவர்; இந்தியர்க்கிடையே யிருந்த வேற்றுமைகளினலேயே ஆங்கிலர் இந்தியாவைக் கைப்பற்ற முடிந்தது; இந்தியர் யாவரும் அந்தக்காலத்தில் ஒற்றுமையுடன் இருந்திருப்பாரானல், வெள்ளைக்காரர் இப்போது இந்தியாவில் ஆட்சி செய்ய முடியுமா? இந்தியர்களில் 35 கோடி பேர் இருந்தும் அவர்களுக்குள்ளே ஒற்றுமை யிராதபடியால் வெள்ளைக்காரர்க்கு அடிமைகளாகிறார்கள். வெள்ளைக்காரரின் தொகை காலரைக்கோடி வரையில்தான்; ஆனால் அவர்களுக்குள்ளே பூரணமான ஒற்றுமையுண்டு; மெல்லிய அடம்பன்கொடிதானும் திரண்டால் (ஒன்ருக முறுக்கப்பட்டால்) பெலனுடையதாகும். இந்தியர், இலங்கையராகிய எமக்கிடையேயுள்ள வேற்றுமைகள் நீங்கவேண்டும். மருமக்களே நாங்கள் இலங்கையரல்லவா? ஆனால் எங்களுக்குள்ளே- மிகச் சிறு தொகையினராய எமக்குள்ளே——யிருக்கும் வேற்றுமைகளைப் பாருங்கள்; சிங்களர் என்றும் தமிழர் என்றும் சோனகர் என்றும் பறங்கியர் என்றும் வேடர் என்றும் எமக்குள்ளே வேற்றுமை யிருக்கின்றன: இனி, தமிழர்க்கிடையே, சைவர், வைணவர், புரொட்டெஸ்தாந்தக் கிறிஸ்தவர், கத்தோலிக்க கிறிஸ்தவர் என்று வித்தியாசங்கள் இருக்கின்றன: இவை மாத்திரமா? நளவர், பள்ளர் அம்பட்டர், வண்ணார், உயர்சாதி, கீழ்சாதி என்று பல வேற்றுமைகள் இருக்கின்றன: உலகத்திலே பிறந்த யாவரும் ஓரே கடவுளின் புத்திரர் என்ற எண்ணம எமக்கு இல்லை: ஒருவரை உயர்ந்தவர்என்றும இன்னொருவரைத் தாழ்ந்தவரென்றும் நாம் மூட எண்ணத்தினல் மதித்து நடக்கின்றோம். இதனலேயே எமக்குள்ளே வேற்றுமைகள் மலிந்துவிட, ஊர் இரண்டுபட்டால், கூத்தாடிக்குவசதி என்றபடி அந்நியர் எமக்குளளே புகுந்து எம்மை அடிமைகளாக்கிவிட்டனர். நிற்க,

காங்கிரஸ் மகாசபையைச் சில பெரிய இந்தியத் தலைவர்கள் சேர்ந்து ஆரம்பித்தனர் என்றேன். இந்தக் காங்கிரஸ் மகாசபை வருடந்தோறும் கூடிக்கொண்டுவந்தது. கூடுங்காலத்தில் இந்தியாவுக்கு இன்ன இன்ன செய்ய வேண்டும். இன்ன இன்ன சட்டத்தைத் தவிர்க்க வேண்டும் என்று வாயால் நிர்மானித்து பெட்டிசம் எழுதி ஆங்கில அரசினர்க்கு அனுப்பிவந்தது: இந்தப் பெட்டிசங்களை சில சமையங்களில் வெள்ளைக்காரர் கவனித்து வந்தனர்; பல சமையங்களில் அவற்றைக் குப்பைத் தொட்டியில் வீசி யெறிந்துவிட்டனர்: அப்படிக் கவனிக்காத பட்சத்தில் இந்தியர்களால் என்ன செய்ய முடியும்; சில சமையங்களில் சில இந்தியத் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து இங்கிலாந்துக்குச் சென்று அங்கே மன்றாடுவர்: ஆனல் இந்த மன்றாட்டங்களினல் பயன்கிடைக்கவில்லை.

மருமக்களே; காங்கிரஸ் மகாசபையைப்பற்றி இன்றைக்கு இவ்வளவும் போதும்; அடுத்தமுறை மிகுதியைச் சொல்லித் தருகிறேன்.

### இரு பெரும் பிரபுக்கள்.

என்னுடைய அருமை மருமக்களே,

இலங்கையிலே எமது ஹிந்து மதத்தையும், தமிழையும், ஆங்கிலத்துடன் விருத்திசெய்தற்காக ஓர் பெரும் கல்லூரி வண்ணார் பண்ணையில் இருக்கிறது இதன் பெயர்தான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இந்தப்பெரியவித்தியர்சாலை 45வருஷங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்டது. இதனைத்தாபித்த பிரபுக்களில் இருவரே முதன்மையானவர். ஒருவர் சித. மு. பசுபதிச்செட்டியார்என்பவர்; மற்றவர் சி. நாகலிங்கம் என்பவர்: நாகலிங்கம வண்ணார்பண்ணையில் ஓர்பிரபுகுடும்பத்திற்பிறந்து பெருங்கல்விகற்றுப் பொருள் சம்பாதித்து இந்த இந்துக்கல்லூரியைத்தாபித்து அதன் பொருட்டு அரும்பாடுபட்டஉத்தமராகும்; இந்துக்கல்லூரி இருக்கும் வரை அப்புக்காத்து நாகலிங்கத்தின் பெயரும் இருக்கும். இவருடைய இனசனத்தவர் இப்போதும் வண்ணார்பண்ணையில் இருக்கிறார்கள்

சித: மு. பசுபதிச்செட்டியார் என்னும் மற்றப்பிரபுவின் பிரதிமைப்படம் என்னிடம்இப்போது கைவசம் இல்லை அது கிடைத்தவுடன் அந்த உத்தமப்பிரபுவைப் பற்றியும் கொஞ்சம் சொல்லித்தருகிறேன்.

இங்ஙனம்
உங்கள் வாஞ்சையுள்ள
**சுப்புமாமா.**

### தீயில் நடப்பது அனைவருக்கும் சகஜமா!

ஜனுப் குதாபக்ஷ் என்பவர் தீ மீது நடந்து இங்கிலாந்தைப் பிரமிக்கச் செய்து விட்டார். ஆனல் அந்த வித்தையை இந்தியாவில் பலர் செய்து வருகின்றனர். சாதாரணமாகத் தென்னாட்டுக் கிராமப்பகுதிகளில் கூட திரௌபதை அம்மன் கோவில் உற்சவங்களின் போதும் பாமரமகள் கொண்டாடும் 'பஞ்சா'ப் பண்டிகைகளின் போதும் தீ மிதிப்பது சகஜமாக அனைவராலும் முடிந்த தொரு செயலாகவே இருப்பது தமிழ்நாட்டார் பெரிதும் அறிந்திருக்கு- விஷயமேயாகும் இப்போது தெல்ஹி ஹிந்து காலேஜைச் சேர்ந்த பஞ்சாபி இளைஞர் ஸ்ரீ ஜீ. எஸ். ஆனந்தா என்பவர், தம காலேஜைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரையும் உடன் அழைத்துக் கொண்டு தீயில் இறங்கி நடந்து காட்டினர். இருவரும் தீயினல் சிறு கொப்புளங் கூட அடையவில்லை ஸ்ரீ ஆனந்தா இதனுடன் நில்லாமல் உயிருள்ள பாம்பை விழுங்குதல், கண்களைக் கட்டிக் கொண்டு வாசித்தல் முதலிய வித்தைகளையும் செய்து காட்டினராம்.

### பர்மாத் தேசாதிபதி.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தவராகிய கௌரவ ஆர்ச்சிபல்ட்டக்ஸன் கொச்றேன் என்பவர் பர்மாத்தேசாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் சேர்ஜியூஸ்ரீபன்ஸன் என்பவரே தற்போதைய பர்மாத்தேசாதிபதியாவர்.

## இலங்கையில் முத்துக்குளிப்பு.

**சமீபத்தில் நடக்குமா?**

**அதிகாரியின் ஆராய்ச்சி**

இம்மாதத்தின் கடைசிப்பகுதியில் மறிச்சுககட்டி முத்துப் பாரைகளை ஆராய்வதற்கு அதிகாரிகள் நிச்சயித்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

இதன் பொருட்டு நோற்றிலஸ் என்னும் ஆராய்ச்சிக்கப்பல் இதுவிஷயத்தில் அநுபவமுடைய விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளருடன் மறிச்சுக்கட்டிக்கு வருகிற 23ந் தேதியன்று செல்லும்.

சென்ற ஆண்டிலும் இத்தகைய ஓர் ஆராய்ச்சி அதிகாரிகளாற் செய்யப்பட்டது. அப்போது முத்துச் சிப்பிகள் காணப்படவில்லை.

## லண்டனில் வியாபாரப்பிரதிநிதி

லண்டனில் இலங்கையின் வியாபாரப்பிரதிநிதியாயுள்ள டக்டர் போல் ஈ. பீரிஸ்என்பவர் இவ்வாண்டுடன் இளைப்பாறுபவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் அவரது உத்தியோக காலவெல்லையை இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடித்திருக்கின்றனர் என்று இப்போது தெரியவருகிறது.

## தேசாதிபதியின் காலிவிஜயம்.

நமது தேசாதிபதியவர்கள் வருகிற மார்ச் மாதம் 28 ந் தேதியன்று காலிக்கு விஜயம் செய்வாரென்று அறியக்கிடக்கின்றது.

## ஊரெழு சைவ வாலிபசங்கம் விசேஷ மகாசபை.

சைவ வாலிபசங்க விசேஷமகாசபையொன்று நிகழும் 1936ஆ மாசிமூ 9உ ஞாயிறுக்கிழமை மேற்படி சங்கத்துக்குரிய ஸ்ரீ கணேசவித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. சங்க அக்கிராசனர் திரு. இ. சபாரத்தினமவர்கள் தலைமைவகித்தார்கள்.

அத்தருணம் அங்கத்தவர்களும் ஏனைய ஊர்வாசிகளும் நிறைந்திருந்தார்கள்.

சென்றவருடாந்த மகாசபைக் குறிப்பு வாசிக்கப்பெற்று அங்கீகரிக்கப்பெற்றது.

சென்ற 18-1-36ல் கூடியவருடாந்த மகாசபையில் தேர்வுசெய்யப் பெற்ற ஐந்து (Trustees) தருமகர்த்தர்களில் திரு- வே. தம்பையா, அவர்களும் திரு. ஸ. ஆறுமுகமவர்களும், அவ்வுத்தியோகத்தையேற்க முன்வாராதபடியால் அவர்களின் இடத்துக்கு பின்வரும் அங்கத்தவர்கள் நியமிக்கப்பெற்றனர்.

1. திரு. போ. அப்புக்குட்டி அவர்கள்
2. ,, நா. தம்பு அவர்கள்.

மேற்படி சபையார், திரு வே. தம்பையா அவர்கள் சுயநலவாஞ்சை மேலிட்டால் நம்பிக்கைத் துரோகம் செய்ய எண்ணி தன்னுடன் பள்ளிக்கூடத்தையும் கோண்டேக மாறுவேடம் போட்டுநிற்பது போல் நீங்களுஞ் செய்யாமல் பள்ளிக்கூடம் எப்போதும் பொதுவான தென்பதை மறந்துவிடாமல் சுயநலப்பேயை ஒட்டி சீவகாருண்ணியத்தை முற்கொண்டு "அன்பர்பணி செய்ய என்னை

ஆளாக்கி விட்டுவிட்டால்,
இன்பநிலை தானேவந் தெய்தும்
பராபரமே"

"என்கடன் பணி செய்துகிடப்பதே" என்பவைகளை நினைத்து அங்கத்தவர்களுடனும் ஏனைய ஊர்வாசிகளுடனும் என்றென்றைக்கும் சகோதரம் போல் ஒத்துழைக்க வேண்டுமென்றும் மன்றாடிக் கேட்டுக் கேட்டுக்கொள்ளப் பெற்றர்கள்.

மேலும் தருமகர்த்தர்களுக்கு(*Trustees*) வேண்டிய அதிகாரத்தைக் கொடுக்க 15 அங்கத்தவர்கள் நியமிக்கப்பெற்றர்கள். ஈற்றில் சபாநாயகருக்கு ஸ்துதி கூறிக் கூட்டம் முடிவெய்தியது.

இங்ஙனம்,
போ. அப்புக்குட்டி,
கௌரவ காரியதரிசி,

ஊரெழு.
10-2-36.

## மதிப்புரை.

### பூகோளம் நாலாம் பாகம்

இது தமிழ்ப்பாடசாலைகளிலும் ஆசிரிய பாடசாலையிலும் தலைமை ஆசிரியராகக் கடமை பார்த்து அநுபவம் பழுத்தவரும் இப்பொழுது இளைப்பாறி உபகாரவேதனம் பெறுகின்றவருமாகிய ஸ்ரீ அ இளையதம்பி உபாத்தியாயாவர்களால், [ சரப் ]பூன்னர் எழுதி வெளியிட்டு வந்த "பூகோளம்" என்னும் தொடர் நூலின் நான்காம் பாகமாக எழுதி வெளியிடப்பட்டதாகும். இக்காலத்துள்ள வித்தியாபகுதியாரின் புதிய நிபந்தனைகட்கு இயைய, தமிழ் கனிஷ்ட சிரேஷ்ட வகுப்புக்களுக்கு ஏற்ப, விளக்கத்துக்குரிய பல படங்கள் இரேகைகள் குறிப்புக்களுடன் திட்டநுட்பம் வாய்த்ததாய் மேற்படி ஆசிரியரால் இயற்றப் பெற்றுள்ளது. இருபது பெரும் பிரிவுகளும் 126 உபபிரிவுகளுமான விஷயங்களை இந்நூல் கொண்டுள்ளது. 230 பக்கங்கள் வரையில் உடையது. மேல் வகுப்புக்களிற் பூமிசாஸ்திரம் பயிலும் மாணாக்கர்களுக்கு இன்றியமையாதது. பிரதியொன்றின் விலை ரூபா 1; பெற விரும்புவோர் மேற்படி நூலாசிரியரிடத்தும் யாழ்ப்பாணம் ஸ்ரீசண்முகநாதன் புத்தகசாலை முதலாம் பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்.

### ஸ்தோத்திரத் திரட்டு.

இதனைத் தொகுத்தவர் முனீசுவரம் பிரம ஸ்ரீ சி. பத்மநாபஐயரவர். இதன் கண் மூவர் தேவாரம் திருவாசகம் திருவிசைப்பா திருப்பல்லாண்டு புராணம் திருப்புகழ் விநாயக கவசம் கந்தசஷ்டி கவசம் முதலியன வற்றின் தொகுதிகளும், திருவுருவப் படங்களும், நான்முகத்தில் ஆலயதரிசனவிதி சைவசமயம் ஆசாரம் திருக்கோவிலிற் செய்யத்தகாத குற்றங்கள் முதலியவற்றைப் பற்றிய வசனங்களுங் காணப்படுகின்றன. இது நான்காம் பதிப்பாகும். பிரதியொன்றின் விலை சதம் 30. (அணா 5) பெற விரும்புவோர் கொழும்பு, ஜிந்துப்பிட்டித்தெரு, சரஸ்வதி புத்தகசாலையிற் பெறலாகும்.

### கமத்தொழில் விளக்கம்

இது இலங்கைக் கமத்தொழிற் பகுதியாரின் அனுமதிப்படி ஆசிரியர் செல்லையா H நக (J. P.) அவர்களால் சென்ற ஐப்பசி மாசம் தொடக்கம் மார்கழி மாசம் முடிய உள்ள மூன்று மாசங்கட்குரிய சஞ்சிகையாக வெளியிடப்பெற்றது இவ்வெளியீட்டின் கண் உழவுதுமி [?] தொடக்கம் இலங்கையின் கூட்டுறவுச் சங்கங்கள் சாறுகவுள்ள 18 அரியவிஷயங்கள் உள்ளன விவசாய விருத்தியின் பொருட்டு இவ்வாசிரியர் அங்காட்டோடக்கம் இற்றைவரையில் இடையறாது உழைத்து வருதலும் இதனால் இந்நாளார் எய்திவரும் பயனும் உலகப் பிரசித்தமாகும். பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பட்டினம் 3-ம் குறுக்குத்தெருவிலுள்ள மேற்படி வெளியீட்டு நிலையத்திற் பெற்றுக்கொள்ளலாகும்.

### பழனியாண்டவர் திருவுருவப்படம்.

சுப்பிரமணியப் பெருமானுடைய படை வீடுகளென்று சொல்லப்படும் ஆறு பிரதான ஸ்தலங்களுள் ஒன்றாகிய பழனியின் கண்ணே எழுந்தருளிய ஆண்டவரின் வர்ணத் திருவுருவப்படம், பேற்படி பங்கைக்கோவில் அயன்மிராஸ், ஸ்ரீ P. நடராச பண்டாரமவர்களால் எமது தரிசனத்திற்கு அனுப்பப் பெற்றுள்ளது. இத்திருவுருவப்படம் அருளொழுகும் திருமுகமும் பொன்போல ஒளிரும் திருமேனியும் கௌபீன உடையுமாக விளங்குவதனால் அன்பர்கள் எவருடைய உள்ளத்தையும் உருகச் செய்யும் மாண்புடையதாகும். அநுதினமும் தியானித்துப் பூசிக்கத்தக்கது. பரிசுத்தமான இடங்களில் மங்கலகரமாக வைத்துப் போற்றத்தக்கது; இத்திருப்படத்தில் ஒன்றைப் பெற விரும்புபவர் 10 சத முத்திரை வைத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாகுமென பேற்படி நடராச பண்டாரமவர்கள் தெரிவிக்கின்றார்.

எமது பார்வைக்கென அனுப்பப்பட்ட புத்தகம் பத்திரிகைப் படம் என்னுமிவற்றின் பொருட்டு நன்றி கூறுகின்றேம்.


# கொய்லன் வங்கி (லிமிற்றெட்)

(1919-ம் ஆண்டு திருவாங்கூரிற் பதிவுசெய்யப்பட்டது)

## யாழ்ப்பாணம்.

காலங் குறிக்கப்பட்ட வைப்புப்பணம்

( FIXED DEPOSITS )

எங்கள் வங்கியில் க்ஷேமிக்கும்படி தரப்படும் வைப்புப்பணத்திற்குப் பின்வரும் விகிதமான வட்டி கொடுக்க நிர்ணயஞ் செய்திருக்கிறேம்.

| | |
|---|---|
| 6 மாச காலம் | 3½ விகிதம் |
| 12 மாச காலம் | 4½ விகிதம் |
| 24 மாச காலம் | 5 விகிதம் |

ஏனைய விபரங்களை எங்களிடம் விளங்கியறிந்துகொள்ளலாம்.

V. C. ஓமன் B. A.
யாழ்ப்பாண ஏஜன்ற்

Y. 71 23-5 to. 22-5-36



வெளிவந்து விட்டது!

# தஞ்சை வாணன் கோவை

சொக்கப்ப நாவலருரை

பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்.

(வித்துவான் பரீக்ஷை [மதுரைத் தமிழ்ச்சங்கப்] பாலபண்டித பரீக்ஷைகட்குப் பாடமாக நியமிக்கப்பட்டுள்ள இலக்கியம்.)

இப்பதிப்பு, சென்னைச்சர்வகலாசங்கத்தாரால் வித்துவான் பட்டம் வழங்கப் பெற்றவரும், யாழ்ப்பாணம் — ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்துப்பரீக்ஷகரில் ஒருவரும் ஆகிய சிதம்பரம் ஸ்ரீமத் ந. சுப்பையபிள்ளை அவர்களால் பல ஏட்டுப்பிரதி கொண்டு திருத்தம் பெற்றது; பல்வகை ஆராய்ச்சிக் குறிப்புரை, நூலாசிரியர் உரையாசிரியர் வரலாறு, விஷயசூசிகைமுதலாயின சேர்க்கப் பெற்றது. யாழ்ப்பாணம் - சைவபரிபாலனசபையாரால் அச்சிட்டு வெளியிடப் பெற்றது. "பெதர்வெய்ட்" பேப்பர் "டெமி" எட்டுப்பிரமாணங் கொண்ட 400 பக்கங்களை உடையது.

விலை: (காலிகோ பயிண்டு) ரூபா. 3 அணா 8.
,, (சாதா ,, ) ,, 3 —

தபால் (பார்சல்) சார்ஜ் { இலங்கை-இந்தியாவுக்கு அணா—4. மலாய்நாடு முதலியவற்றிற்கு ,, —6.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் விசேஷ கமிஷன்கொடுக்கப்படும். பெறவிரும்புவோர், பின்வரும் விலாசத்திற்கு எழுதுக.

மானேஜர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
யாழ்ப்பாணம்.


## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டஙச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் அ. ப. சே. கடையில் அடைவு வைக்கப்பட்டு இதுபோது காலங் கடந்த மேற்படி சட்டத்தின் 12 - ம் பிரிவின்படி பிரசித்தஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| திகதி. | இல. | ரூபா. | ஊரும் பெயரும். நகை விபரம். |
|---|---|---|---|
| | | | 1934. ஆவணி |
| 20 | 4373 | 60 | நவாலி பேதுறு செபமாலை பொன்முகப்பு இல்லாத பீலிக்காப்பு சோ. 1 |
| 22 | 4399 | 15 | கோண்டாவில் கார்த்திகேசு அப்பாக்குட்டி பொன் இமி. சில கல் இல்லாத கடுக்கன் ஒன்று |
| 29 | 4452 | 22 | செட்டித்தெரு முத்துக்குமாரு ஐயாத்துரை பொன் இமி கல் கடுக்கன் ஒன்று. இமி சில கல்லில்லாத மோதிரம் ஒன்று |
| ,, | 4455 | 55 | சங்குவேலி சின்னத்தம்பி கனகசபை பொன் செல்லக்காப்பு சோ. 1 |
| | | | செப்டெம்பர் |
| 4 | 4515 | 22 | வண்கிழக்கு குமாரசுவாமிச்செட்டியார் ஆறுமுகசுவாமிச் செட்டியார் வயிரச்சன்னம் ஒன்றுவைத்த மூக்குத்தி ஒன்று |
| | | | அக்டோபர் |
| 6 | 4804 | 50 | உடுவில் சின்னத்தம்பி கந்தசுவாமி பொன் இமி ஒற்றைக்கல் செட்டி பூ காப்புச் சோடி 1 |
| 15 | 4873 | 12 | மாவிட்டபுரம் மாதன் கணபதி பொன் கைதிருகில்லாத குவளைக்கடுக்கன் சோடு ஒன்று |
| 31 | 5025 | 12 | கல்லூர் கந்தர் சின்னத்தம்பி பொன் காரை ஆணி இமி சில கல் முத்தில்லாத டிம்பியில் பின் தகடு இல்லாத பதக்கம் ஒன்று |
| | | | நவம்பர் |
| 5 | 5083 | 8 | ஆனைக்கோட்டை கணபதிப்பிள்ளை நவரத்தினம் பொன் சில்மோதிரம் 1 |
| 7 | 5085 | 35 | ஆனைக்கோட்டை கணபதிப்பிள்ளை நவரத்தினம் பொன் கெளிசம்பி வளைசக்காப்புச் சோடி ஒன்று |
| 13 | 5123 | 10 | வட்டுக்கோட்டை வீரசிங்கம் நடராசா பொன் பழுது வீ. யே சில்மோதிரம் ஒன்று |
| | | | டிசெம்பர் |
| 12 | 5365 | 13 | வண்வடமேற்கு க. லிங்கலிங்கம் பொன் முகப்பு ஒன்று |
| | | | 1935 ஜனவரி. |
| 3 | 5514 | 9 | நல்லூர் சடையர் கணகசூரியர் பொன் பழுது சில்மோதிரம் ஒன்று. |

விற்பனவு — யுவஹூ மாசிமீ கஉ-ந் திகதிக்குச் சரியான 29—2—36 சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுக்கப்பட்ட நகை பிறகீலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வெந்திஸ் மேஸ்தர்.

Mis. 271, 13&17 2-36.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டஙச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் சட்டாசெரு சி. மு. முத்துவேலு என்பவரிடம் அடைவு பிடிக்கப்பட்டு இப்போது காலங் கடந்த சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்க வேண்டிய நகைகளின் விபரம்.

| இ. | உ. | ரு. | |
|---|---|---|---|
| | | | 1932-ம் ஆண்டு ஆவணி |
| 2403 | 5 | 250 | வண்மேற்கு கார்த்திகேசு சம்பந்தர் பொன் அச்சக்காப்பு சோடி 2 நாக்கட்டிற முடிச்சுக்குத்திய தாலிக்கொடி 1 |
| 2438 | 21 | 200 | வண்மேற்கு கார்த்திகேசு சம்பந்தர் பொன் வீ அட்டியல் டிம்பி பதக்கத்துடன் 1 கடைமணிட்டியல் டிம்பி பதக்கத்துடன் 1 12 வைரம் வைத்த காதோலை சோடி 1 |
| | | | 1932-ம் ஆண்டு மார்கழி |
| 2700 | 24 | 25 | வண்கிழக்கு சரவணை காசுமுத்து மழுக்கை சிகப்பு பதக்கம் 2 நல்ல சிகப்புக் காதோலை சோடி 1 |
| | | | 1933 ம் ஆண்டு ஐப்பசி |
| 3338 | 7 | 60 | உடுவில் பெரியதம்பி சின்னத்துரை பொன் மிளகு காப்பு சோடி 1 |
| | | | 1934-ம் ஆண்டு பங்குனி |
| 3667 | 10 | 155 | சொக்குவில் கிழக்கு சுப்பையா சின்னத்துரை நல்ல சிகப்பு 3 கல் அட்டியல் டிம்பி பதக்கத்துடன் 1 |
| | | | 1934-ம் ஆண்டு சித்திரை |
| 3755 | 12 | 26 | மாவிட்டபுரம் காத்தான் வயிரவி சிமிக்கியாளி சோடி 1 வைரவாளி சோடி 1 சங்குமணியும் பின் கோர்க்கியும் 1 |
| 3758 | 15 | 8 | வண்மேற்கு சின்னையா வலம்புரம் பொன் தாலி 1 |
| 3768 | 23 | 50 | வண்வடமேற்கு சின்னூர் நாகலிங்கம் பொன் ஒட்டக் கட்டுத சறடு 1 |
| | | | 1934-ம் ஆண்டு வைகாசி |
| 3782 | 5 | 60 | வண்கிழக்கு சின்னட்டியர் இராசையா பொன் அச்சக் காப்பு சோடி 1 |
| 3841 | 25 | 6 | சீராவியடி முத்துக்குமாரு இராமப்பிள்ளை இமிக்கல காதோலை சோடி 1 |
| | | | 1934 ம் ஆண்டு ஆனி |
| 3873 | 6 | 16 | வண்கிழக்கு வயிரமுத்து கதிரவேலு 3 கல் மோதிரம் 1 |
| 3879 | 6 | 20 | வண்கிழக்கு வயிரமுத்து கதிரவேலு கல் கட்டின உருவிப்புரோச்சு 1 |
| 3882 | 8 | 40 | வண்கிழக்கு கதிரவேலு அருணாசலம் பொன் அச்சுக்காப்புச் சோடி 1 |
| | | | 1934-ம் ஆண்டு ஆடி |
| 3973 | 18 | 80 | சீர்வேலி சிநன்னசாமி அருணாசலம் பொன்சிறுசெட்டிக்காப்புசோடி 1 குண்டு வைத்த முழுத சங்கப்பவுன் 2 கடுக்கன் 1 மோதிரம் 1 அச்சரக்கூடு 1 |
| | | | 1934-ம் ஆண்டு ஆவணி |
| 4035 | 12 | 65 | வண்கிழக்கு வயிரமுத்து தம்பையா பொன் செடி வேலைசெய்த அரைப்பட்டி 1 |
| 4048 | 17 | 30 | சீர்வேலி சிருன்னசாமி அருணாசலம் சிகப்புக் கல காதோலை சோடி 1 வெள்ளைக்கல் கடுக்கன் சோடி 1 |
| 4075 | 25 | 30 | சீர்வேலு சிருன்னசாமி அருணாசலம் பொன் மோதிரம் 1 வெள்ளைக்கல் காதோலை சோடி 1 கலனுவாளி சோடி 1 |
| | | | 1934-ம் ஆண்டு ஐப்பசி |
| 4162 | 31 | 325 | வண்மேற்கு அரையப்பா இராசரூபகம் 12 வைரம் வைத்த காதோலை சோடி 1 வைரமிளகு 3 கல் மோதிரம் 1 சிகப்புக்கல் மோதிரம் 1 |
| | | | 1934-ம் ஆண்டு கார்த்திகை |
| 4170 | 1 | 6 | வண்மேற்கு கந்தையா நடராசா இமிற்கல் காதோலை சோடி 1 |
| 4204 | 25 | 10 | வண்மேற்கு காசிநாதர் சோமு நல்ல சிகப்பு பதக்கம் 1 |
| | | | 1934-ம் ஆண்டு மார்கழி |
| 4226 | 4 | 12 | வண்கிழக்கு அரையப்பா செந்தின சபாபதி பொன் சிகப்புக் கல் காதோலை சோடி 1 |
| 4238 | 6 | 12 | கோண்டாவில் வடக்கு சோமசுந்தரம் இராசையா பொன் அரும்பு மணிக்கோர்வை 1 |
| 4243 | 8 | 6 | வண்மேற்கு கரைவதி மாணிக்கன் பொன் பிள்ளையார்தாலி 1 |
| 4247 | 12 | 7 | வண்கிழக்கு வயிரமுத்து கதிரவேலு பொன் மோதிரம் 1 |
| 4267 | 24 | 5 | வண்கிழக்கு இராமலிங்கம் பெண் முத்தாச்சி பொன்பிள்ளையார் தாலி 1 |

விற்பனவு யுவவருஷம் மாசி மாதம் 14-ம் திகதிக்குச் சரியான (26-ந் திகதி பெப்ருவரி மாதம் 1936-ம் ஆண்டு) புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுக்கப்பட்ட நகை பிறகீலாக மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளைஉடையார்
வெந்திஸ்மேஸ்தர்

Mis 269 10&13-2 36.


# திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரையுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா 5ம் ஆதாயமும்பெறலாம்

தனிகத்தொழிலும உணவுப்பொருள் வியாபாரமும் திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.

வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும். தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆகலால், முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும் நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறேம்.

உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளேம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!!

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும் சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1 11-35 to 31-10-36.) வி.



# நாட்டுப் பொருள் அபிவிருத்தி.

[ வரையுளது ]

மூலதனம் ரூபா 30,000.

100 ரூபாகொண்ட 300 பங்குகள் உடையது.

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை சுரைச்சி நீர்ப்பாச்சற்பகுதிகளில் நடந்துவருகிறது.

பங்கு ஒன்றுக்கு ரூபா 10 விகிதம் பத்துமாதங்களில் கொடுக்கலாம்.

பங்குத்தொகை மொத்தமாகக் கொடுப்பவருக்கு நூற்றுக்கு ஐந்து கழிவு.

நீர்ப்பாச்சற் பகுதி வேளாண்மை நாளேற வருவாய் ஏறிவருவது தெளிவாயிற்று.

அதிக ஆதாயந் தருவது! பங்குக்கு முந்துங்கள்!!

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வ. சோமசுந்தரம்
,, கந்தரோடை வித்தியாசாலை மனேச்சர் சி. கந்தையா
,, நல்லூர் ஆசிரியர் வி. முத்துக்குமாரு M. A.

ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்.

ஆரம்ப கருத்தாக்கள்:—

Dr சி. சுப்பிரமணியம் Retired Prov. Surgeon.
R. R. நல்லையா J. P. மா. ந. ச. தலைவர்,
சி. முத்துவேலு J. P. சொக்குவில் கிராமச்சங்கத் தலைவர்,
K. சுப்பிரமணியம் வித்தியாசாலை மனேச்சர் காங்கேயன் துறை,
ஆ. மாணிக்கம் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி கந்தரோடை.

(H 192, 6-11-35 to 5-5-36) (வி)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டவின் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்ற அடைவு பிடிக்கும் வல்வெட்டித்துறை வே. வ. சிவப்பிரகாசமென்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

| இல. | ரூ. | ச. | பெயர் ஊர் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 1934ம் ஆ. ஐப்பசிமீ | | | |
| 1164 | 8 | 6 | தியாகராசா பொன்னுக்கண்டு வல்வெட்டித்துறை மோதிரம் |
| சார்த்திகைமீ | | | |
| 1228 | 1 | 8 | வயிரவிலிங்கம் தெய்வானைப்பிள்ளை வல்வெட்டித்துறை சிறு கல் தோடு சோடி 1 |
| 1235 | 4 | 10 | சபாபதிப்பிள்ளை தங்கம்மா வல்வெட்டித்துறை நீச்சி |
| 1242 | 7 | 12 | சரவணமுத்து மாணிக்கம வல்வெட்டித்துறை திருகுபூ |
| 1254 | 11 | 15 | காசாதினம் மல்லிகைகண்டு வல்வெட்டித்துறை பஞ்சாயுத மணி |
| 1255 | 11 | 10 | சுபிர்காமர் பொன்னு வல்வெட்டித்துறை பஞ்சாயுத மணி |
| 1280 | 30 | 6 | முருகுப்பிள்ளை தெய்வானை வல்வெட்டித்துறை கற்தோடு சோடி 1 |
| மார்கழிமீ | | | |
| 1304 | 13 | 6 50 | சடையன் கணபதி மாளுக்கானை சிவப்புக்கற்குச்சி சோடி 1, தீச்சி1 |
| 1935ஆ. தைமீ | | | |
| 1347 | 1 | 61 73 | வடிவேல் காகபிள்ளை வல்வெட்டித்துறை முறிச்சக்குத்தியட்டியலும் பதக்கமும் |
| 1361 | 8 | 45 | பொன்னுச்சாமி மாணிக்கம் வல்வெட்டித்துறை பொன்காப்புசோடி1 |
| 1375 | 17 | 10 | மாரிமுத்து காகம்மாள் வல்வெட்டித்துறை மோதிரம் |

விற்பனவு யுவ வருஷம் மாசிமீ 11க் திகதிக்குச் சரியான (23-2-36) ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி தொடக்கம் ஏடுபட்டகைகை பிறீங்லாக மீகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வ. மு. கந்தசாமி.
வெந்தின் மேன்தர்.
வல்வெட்டித்துறை

( Mis 268. 10 & 13-2-36 )

## லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்.

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின்

முதன்மையானதும் சிறந்ததுமான

திவ்விய ஔஷதம்.

மிருகக் கொழுப்பு

கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

Y 53. 1-1—31-12-36)

## மருந்துச் சரக்குகளின்
### விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், கல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச்சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக்கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம்பர் கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—25 | 7—50 |
| ,, குங்குமப்பூ | —50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1- நம். காண்டாமிருகக் கொம்பு களஞ்சுஒன்றுக்கு சதம் —50
ருத்தல் ஒன்றுக்கு ரூபா 40

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்ல சரக்குகளே; எங்களிடம் நேரில் வந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக்கர்ப்பூரம், ஐவ்வாது, அரைத்த சந்தனம், சந்தணக்கட்டை, சந்தணவில்லை சாம்பிறாணி பதக்கம, தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர் வகைகளும், அபிஷேகத் திரவியங்களும் ஓமவாட்டர், சுருட்டுக் கோடாச் சரக்குகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திகளும், மற்றும் மருந்துச்சரக்கு வகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சிவி மருந்து வகைகளும், திருச்சி டாக்டர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும், யாழ்ப்பாணம், டக்டர் ஜே வல்லியம்பிள்ளை அவர்களின் மருந்து வகைகளும் இவ்விடத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

வி. பி. மூலம் பெறவிரும்புவோர், நாலிலொருபாகத்தை முன் பணமாக அனுப்ப வேண்டும். தொடுவாய்ப் பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மனிஆடர் அனுப்பும் விலாசம்,

**ஆ. இராசையா,**

சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச் சரக்குக் கடை

பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

Q. 240 1-1-36 to 31-3-36.

## முக்கிய அறிவித்தல்.

அரசாங்க சபைப் பொதுத் தேர்தல் சம்பந்தமான கூட்ட விவரங்கள், அறிவித்தல்கள் யாவும் இப் பத்திரிகையில் விளம்பரமாகவே பிரசுரிக்கப் படும். இவ் விளம்பரங்களுக்கான விகிதம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஒருமுறைக்கு ஒருபந்தி (கலம்) | ரூ. | 10-00. |
| ,, அரைப்பந்தி | ,, | 5-50. |
| ,, கால் பந்தி | ,, | 3-00. |
| , 1 அங்குலம். | | -75. |

விளம்பரக் கிரயம் முற்பணமாகவே இறுக்கப்படல்வேண்டும். இவ் விளம்பரங்கள் மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மானேஜர்
இந்துசாதனம்,

### விளம்பரம்.

யாழ்ப்பாணம் கலாசங்க வெளியீடு 1.

புதிய நாட்டுச் சிலை சாவித்திரம் வெளிவந்துவிட்டது. இருகெல்வேலிச் சைவவித்தியாசாலையிலும், பருத்தித்துறை மனோகரா பிறஸிலும், எல்லாப்புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 1-75 சதம்.

யாழ்ப்பாணம் கலாசங்க வெளியீடு 2.

1937ம் ஆண்டு தமிழ் J. S. C வகுப்பிற்குரிய இலக்கியக் குறிப்புக்கள். இருகெல்வேலிற் கற்பிக்கும் திருஞானசம்பந்தர் ஆசிரியரால் எழுதப்பட்டு அச்சாகின்றன. விரைவில் வெளிவரும்.

Mis 254. 19-1-36 to 18-2-36.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பலவியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுபதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை என் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு,சாலாமுஸ்லி,சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை,பித்தபாண்டு. பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயுஇன்னும் அநேக கடுமையான வியாதிகள்தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் ருதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்து தேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுக்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர்பினுக்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வீ. பி. சட்டம் இல்லாததனுல் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு

Y55 1-1-34 to 31-12-36) சிலோன்.

## "இரதி மன்மத"
## சுகானந்த லேகியம்.

க்ஷயம் - ஸ்வாஸகாஸம் - மேகம் - குன்மம் முதலிய கொடூரமான வியாதிகளையும், வீரியஅழிவு, மலபந்தம், அஜீர்ணம், சரீரமெலிவு, மூலஎரிச்சல் முதலிய சர்வவியாதிகளையும் போக்கி, இரத்தத்தை விருத்திப்படுத்தி, ஆண்மையூட்டி கிழவர்களுக்கும் கூட யௌவனத்தை உண்டுபண்ணிச் சுகமனுபவிக்கச்செய்வதில், இதற்கு நிகரான "சித்த" ஔஷதம் வேறுகிடையாது:—

ஓர் முறை பரீக்ஷியுங்கள்.

பூரணசுகத்திற்குப் போதுமான 40 நாட்கள் சாப்பிடக்கூடிய ஔஷதத்தின் விலை ரூபா } 4 0 0
தபால்சார்ஜ வேறு.

N. B. முழுவிவரங்களடங்கிய "ஔஷத பூஷணம்" வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

விலாசம்:—

மலையாள **"சித்த" ஔஷதாஸ்ரமம்,**
2 மெயின்ரோட்,
கோல்லம், **Quilon S. India.**

H 208. 1-12-35 to 31-5 36

<u>திறம் தேக்கமரம்</u> <u>பவுண்மார்க் கோளுக்கி ஓடு.</u>

மிகத்தொகையாக இப்பொழுது வந்திருக்கின்றன.
சீயம் தேக்கமரங்கள் ரூபா 2-60சதந் தொடக்கம்
றங்கூன் தேக்கமரங்கள் ரூபா 2-75சதந் தொடக்கம்

### இன்னொரு பிரதான விளம்பரம்.

நாங்கள் எங்கள் காசுக்கடையில், ஈடுபிடிக்கும் நகைகள் விஷயத்தில் 100 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் இதுவரையிலிருந்த 12 விகித வட்டியைத் தவிர்த்து 9 விகிதமாகக் குறைத்துக்கொண்டோம் என்பதாம்.

திறமான பொருள், நேர்மையான வியாபாரம் சகாயமான விலை இவைகளில் எங்கள் கடையே பேர் பெற்றது.

<u>பவுண் "மார்க்" ஓடுகள் விசேஷமானவை</u>

**சி. வீரகத்திப்பிள்ளை** அண்டு சன்ஸ்
(Y 57. 1-5-35to30-4-36.) பெரியகடைத்தெரு, பாங்ஷல் வீதி.

## பத்திரக் கிரயம்.

( முற்பணமாக அனுப்புதல் வேண்டும். )

| யாழ்ப்பாணப் பட்டினம் | தமிழ் | ஆங்கிலம் | இருபிரதிகளும். |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| (தபாற்கூலி எல்லைக்குட்பட) | | | |
| ஒருவருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 9 - 00 |
| ½ வருடத்திற்கு | 3 - 00 | 3 - 00 | 5 - 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 00 | 2 - 00 | 3 - 75 |
| இலங்கை இந்தியா | | | |
| ஒருவருடத்திற்கு | 8 - 00 | 8 - 00 | 12 - 00 |
| ½ வருடத்திற்கு | 4 - 50 | 4 - 50 | 7 . 00 |
| ¼ வருடத்திற்கு | 2 - 50 | 2 - 50 | 4 - 50 |
| சிங்கப்பூர் முதலிய அந்நிய நாடுகள் | | | |
| ஒருவருடத்திற்கு | 9 - 00 | 9 - 00 | 13 - 00 |
| ½ வருடத்திற்கு | 5 - 00 | 5 - 00 | 7 - 50 |
| ¼ வருடத்திற்கு | 8 - 00 | 3 - 00 | 5 - 00 |

தனிப்பிரதி சதம் 5

கொழும்பு தனிப்பிரதிநிதி:-

ப. மு. ரா. முத்துச்சாமி செட்டியார்,
"நியூஸ்மார்ட்"
89. கோவில்தெரு,
கும்பனித்தெரு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, 13th February 1936